ஸ்ரீகிருஷ்ணாய நம:

ஸ்ரீவியாசபகவான் அருளிச்செய்த

107

# ॥ श्रीउत्तरगीता ॥

# உத்தரகீதை.

இஃது

14557

ஸ்ரீகௌடபாதாசாரியரால் செய்யப்பட்ட

வியாக்கியானத்தை யநுசரித்துத்

தஞ்சைமாநகரம்,

ஸ்ரீ-ல-ஸ்ரீ

வி. பிரஹ்மானந்தசுவாமிகள் அவர்களால்

இயற்றிய தமிழுரையுடன்

தஞ்சை

"ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர பிரஸில்"

பதிப்பிக்கப்பெற்றது.

மூன்றாம் பதிப்பு 1000.

சுக்ல-ஸூ (5030)

இதன் விலை] *All Rights Reserved.* [அணா 6·

ஸ்ரீ [illegible] நம:

# முகவுரை.

RECEIVED
25. MAY 1931
THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY * TANJORE. *

புராண இதிகாச முதலியவற்றில் உப[illegible]யுள்ள பல கீதைகளடங்கியது பல புத்தகரூபமாய் வெளிப்படும் கீதைக்கொத்து முதற்புத்தகமாகிய இவ்வுத்தரகீதை இதிகாசமாகிய மகாபாரதத்திலுள்ளது: இது துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்தற்பொருட்டு அர்ச்சுனனுக்குச் சாரத்தியம் நடாத்திய ஸ்ரீ அகிலலோகநாயகராகிய பகவானால் அவ்விரதத்திலிருந்து உபதேசிக்கப்பட்டதாகலின் **உத்தரகீதை** யெனப் பெயர்பெற்றது.

இதன் விஷயங்கள் ஞானமும் யோகமுமாம் இந்தப் பகவத் வாக்கியம் பரமபுருஷார்த்த காரணமென்று உணர்ந்து தமிழுரையுடன் அச்சிடப்பட்டது. இதன் மூலசுலோகங்கள் இதுவரையிலும் சுத்தமாய் அச்சிடப்படாமையால் தஞ்சைமாநகரம் மகாராஜா அரண்மனை சரஸ்வதிமாலிலுள்ள கையெழுத்துப்பிரதி 2. சுவாமிகளிடமிருந்த கையெழுத்துப்பிர[illegible]
பம்பாய் நகரத்தில் அச்சிட்ட பிரதி 1. சென்[illegible]
சிட்டுள்ள தெலுங்கு அச்சுப்பிரதி 1.
இந்த ஆறு பிரதிகளுள் சரஸ்வதி[illegible]
திலுமிருந்த இரண்டு பிரதி[illegible]

வியாக்கியானத்துடனுள்ள சுத்தப்பிரதிகள். அவற்றின் படியே மூலசுலோகம் சுத்தமாய்ச் சோதிக்கப்பட்டு அவ் வியாக்கியானத்திற் கிணங்கச்செய்யப்பட்ட தமிழுரையுடன் பதிப்பிக்கப்பட்டது. இவ்வாறே இக்கீதைக் கொத்தில் வரும் கீதைகள் முழுவதும் இதனினும் செவ்வையாய்ச் சோதித்துத் தமிழுரையுடன் அச்சிடப்படும். இக்கீதைக்கொத்தின் மூலமாய் சுமார் 30 கீதைகளுக்குமேல் வெளிவரும். யாரேனும் இக்கீதைக் கொத்திற்கு அனுகூலமாகத் தங்களிடமுள்ள கீதைப் பிரதிகளை அனுப்புவார்களாயின் அக்கீதை களில் அவர்கள் பெயரை வெளிப்படுத் துவதுடன் அவர்களுக்கு அச்சிட்ட பிரதி ஒன்று இனாமாய்க் கொடுக்கப்படும்.

சூ. பா.

T000107
Sarasvati Mahal Library. Thanjavur

॥ ॐ ॥

श्रीगोपालकृष्णपरब्रह्मणे नमः

# உத்தரகீதை.

## முதல் அத்தியாயம்.

### உரை மங்கலம்.

अखंडसच्चिदानन्दमवाङ्मानसगोचरम् ।
आत्मानमखिलाधारमाश्रयेऽभीष्टसिद्धये ॥

அகண்டசச்சிதாநந்தமும், வாக்கு மனதிற்கெட்டாததும், சர்வாதாரமுமான ஆத்மாவை அபீஷ்டசித்தியின் பொருட்டு ஆசிரயிப்பேனாகை.

(அவதாரிகை) தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்தில் ஸ்ரீமந் நாராயணனாகிய கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு அருளிய ஆத்மதத்துவ உபதேசத்தை ராஜ்ஜியபோகத்திலழுந்திய மனதினால் மறந்து, சில தினங்களுக்குப் பின் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடத்

தில் பிரார்த்தனைசெய்து, கேசவா! எதன் ஞானத்தினால் ஜீவர்கள் அப்பொழுதே முக்திபடைகின்றார்களோ, அவ்வாத்மஞானத்தைச் சொரூபலக்ஷண தடஸ்தலக்ஷணங்களின் வாயிலாகத் தம்மைச் சரணடைந்த எனக்கு உபதேசஞ் செய்தருளல்வேண்டும் என்று பிரார்த்தித்துப் பிரசனஞ்செய்கின்றார்:—

अर्जुनउवाच:—

यदेकं निष्कलं ब्रह्म व्योमातीतं निरञ्जनम् ।
अप्रतर्क्यमविज्ञेयं विनाशोत्पत्तिवर्जितम् ॥ १ ॥

அர்ச்சுனன் கேட்கலாயினன்:—

எது ஏகமாயும் (சஜாதீயாதி பேதமில்லாததாயும்), வியாபகமாயும், நிஷ்கள (நிராகார) மாயும், ஆகாய முதலிய தத்துவங்களுக்கு அப்பாற்பட்டதாயும், நிரஞ்சன (சொப்பிரகாச) மாயும், * க. மனதிற்கெட்டாததாயும், இந்திரியங்களால் அறியத்தகாததாயும், உற்பத்திநாச மில்லாததாயும், (க)

---

* க "यन्मनो न मनुते । எத்தனை மனது நினைக்கிறதில்லையோ" என்னும் சுருதியினால்.

कैवल्यङ्केवलं शान्तं शुद्धमत्यन्तानिर्मलम् ।
कारणं योगनिर्मुक्तं हेतुसाधनवर्जितम् ॥ २ ॥

கைவல்யவடிவமாயும், ஒப்பற்றதாயும், சாந்தமா யும், சுத்தமாயும், அத்தியந்தம் மனமில்லாததாயும், எல்லாவற்றிற்குங் காரணமாயும், யோகத்தினல்பாச நீங்கியதாயும், ஹேது சாதனங் (நிமித்தோபாதானத் தன்மைத் தர்மங்)களில்லாததாயும், (உ)

हृदयाम्बुजमध्यस्थं ज्ञानज्ञेयस्वरूपकम् ।
तत्क्षणादेव मुच्येत तज्ज्ञानाद्ब्रूहि केशव ॥ ३ ॥

(அந்தர்யாமித் தன்மையால்) இருதய தாமரையின் நடுவிலிருப்பதாயும், ஞானஞேய சொரூபமுளதாயு முள்ள எதனை யறிதலால் அந்த க்ஷணத்திலேயே முக்தியடைவார்களோ, கேசவனே! அதனை எனக்கு உபதேசித்தருளல்வேண்டும். (௩)

(அ-கை) இவ்வாறு அர்ச்சுனன் வினவிய பொருளி னுக்குச் சந்தோஷித்தவராய் ஸ்ரீ கிருஷ்ணபகவான் உத்தரஞ் சொல்லுகின்றார்:—

श्रीभगवानुवाच :—

साधुपृष्टम्महाबाहो बुद्धिमानसि पाण्डव ।
यन्मां पृच्छसि तत्त्वार्थमशेषंतद्वदाम्यहम् ॥ ४ ॥

ஸ்ரீ பகவான் சொல்லுகின்றார் :—

* உ. மகாபாகுவா (பராக்கிரமசாலியா) கிய பாண்டவா ! நீ நல்ல பிரசினஞ் செய்தாய். நீ மிகப்புத்திசாலி. நீ எவ்வுண்மையான அர்த்தம் என்னைக் கேட்டாயோ, அது முழுவதனையும் உனக்குச் சொல்லுகிறேன் கேள். (௪)

---

* உ. இச்சுலோகத்தில்,

(க) மகாபாகு (பார்க்கிரமசாலி) என்று விளித்தது சகல சத்துருக்களையும் நாசஞ்செய்தலிற் சமர்த்தனென்பதை விளக்குதற்காம். ஈண்டுச் சத்துருக்கள் ராகமுதலியனவுமாம்.

(உ) பாண்டவா என்றது சற்குலத்திற்பிறந்தமையை விளக்குதற்காம்.

(ரு) புத்திசாலி என்றது அவனைத் துதித்தலோடு தன்றாற் சொல்லப்படும் அர்த்தத்தை உள்ளத்திற்கொண்டமைக்கும் சாமர்த்தியத்தையும் விளக்குகின்றது.

(அ-கை) அந்த ஆத்மபரமாயுள்ள உபாயத்தினையே கூறுகின்றார் :—

**आत्ममन्त्रस्य हंसस्य परस्परसमन्वयात् ।**
**योगेन गतकामानां भावना ब्रह्म उच्यते ॥ ५ ॥**

* க. ஆத்மமந்திர (பிரணவ) த்திற்கும் * உ. ஹம்ஸத்தி (பரமாத்மாவி) ற்கும் ஒன்றற்கொன்று (* ரு. பிரதிபாதத்திய பிரதிபாதகபாவ) சம்பந்தமிருத்தலால் (ஆத்மதத்துவ விசாரமாகிய) யோகத்தினால் * ரு. காமமொ (அறுபகையொ) ழிந்தவர்களின்

---

* க. ஆத்மாவினிடத்தில் தாற்பரியமாக முடிவுபெறுகின்ற பிரணவவடிவமான து **ஆத்மமந்திரம்.**

* உ. **हन्ति स्वतत्त्वज्ञानेन ज्ञातृसंसारमिति हंसः ॥** தனது தத்துவஞானத்தால் ஞாதிரு (அறிபவனது) சம்சாரங்களைக் கெடுக்கின்றது. இதனால் **ஹம்ஸ** மெனப்படும்.

* ரு. பிரதிபாத்திய பிரதிபாதகபாவம் = சொல்லப்படுவது சொல்லுவததெனுந் தன்மை; சொல்லுவது **ஆத்மமந்திரம்** சொல்லப்படுவது **ஹம்ஸம்.**

* ரு. இதனால் ஞானப்பிரதிபந்தகமான அழுக்கின் நீக்கம் காட்டப்பட்டது.

யாவனை (தத்துவமஸி முதலிய மகா வாக்கிய ஜந்நிய * எ, (சரமவிருத்தி) பிரஹ்மம் எனப்படுகிறது. (ரு)

(அ-கை) அத் தத்துவஞானத்தினையும் அதனால் நிவர்த்திக்கப்படும் அவித்தையின் நிவிருத்தியையும் கூறுகின்றார் :—

शरीरिणामजस्यान्तं हंसत्वं पारादर्शनम् ।
हंसो हंसाक्षरञ्चैवकूटस्थं ह्येतदुत्तमम् ॥
यद्विद्वानक्षरं प्राप्य जह्यान्मरणजन्मनी ॥ ६ ॥

சரீரி (ஜீவர்) களுக்கு ஜீவத்தன்மை அதிவடிவமான ஹம்ஸத்துவம் (ஜீவன் முக்தத்தன்மை = பரப்பிரஹ்ம வடிவத் தன்மை) பிரஹ்மத்தின் சாக்ஷாத்காரமாம். ஹம்ஸ (பிரஹ்ம) த்தையும், ஹம்ஸாக்ஷர (பிரணவ) த்தையும், எது அழிவற்றதாயிருக்கின்றதோ அந்த உத்தம கூடஸ்தனையும், வித்வான் அடைந்து ஜனனமரணங்களை ஒழிக்கின்றான். (எ-று)

---

* எ. ஈண்டுச் சரம (கடைசி) விருத்தி பிரஹ்மமென்றது அதன் நிவிருத்தியாகிய அல்லது அதனால் நிவிருத்திக்கப்படும் அவித்தையின் நிவிருத்தியாகிய அதிஷ்டானம் பிரஹ்மமென்பதாம்.

அந்த முக்தியும் ஜீவபரங்களின் ஐக்கியத்தைப் பிரதிபாதிக்கின்றது. (௬)

(அ-கை) அத்தியாரோப அபவாதங்களால் நிஷ்பிரபஞ்சப் பிரஹ்மம் விரிக்கப்படுகின்றது :—

काकीमुखककारान्त उकारश्चेतनाकृतिः ।
मकारस्य च लुप्तस्य कोऽर्थः संप्रतिपद्यते ॥ ७ ॥

**कंच** (க) என்பதும் **अकंच** (அ) என்பதும் **काकी** (காகீ) எனப்படும் சுகதுக்கங்களாகிய அவ்விரண்டும் எதற்கிருக்கின்றனவோ அது **काकी** (காகீ) எனப்படும். **काकी** (காகீ) என்னும் சொற்பொருள் அவித்திப்பிரதிபிம்ப ஜீவனும். ஈண்டு அந்த **काकी** (காகீ) என்னும் சொல்லின் முகத்தில் (ஆதியில்) உள்ள **क** (க) காரத்தின் கடைசியிலுள்ள அக்ஷரமாகிய **अ** (அ) காரம் விராட்டெனப்படும். **काकीमुख** (காகீ முக) மென்பதின் கண்ணுள்ள **म** (ம) காரத்தின் மேலதாகிய **उ** (உ) காரம் சேதனமாகிய இரண்யகர்ப்ப வடிவ (வாசக) மாம். **काकीमुख** (காகீமுக) மென்பதில் **उ** (உ) காரத்திற்கு முன்னுள்ளதாகச் சொல்லப்பட்ட **म** (ம்) காரம் அவ்வியாகிருதமெனப்படும். **उ** (உ) காரத்தில் **अ** (அ) காரமும், **म** (ம)

காரத்தில் उ (உ) காரமும் (ஓங்) காரத்தில் म (ம்) காரமுமாக இவ்வாறு ஒடுங்கிய அதற்குப் பொருள் யாது? அகண்டாநந்தாத்வைத சச்சிதாநந்தரூப லக்ஷியார்த்த மாகிய பிரஹ்மமே பொருளாம். ஆதலால் இப்பிரணவ ஐக்கியாநுசந்தானத்தைச் செய்பவன் அந்தப் பிரஹ்மத்தையடைகின்றான். (எ-று)

(க) ஸ்ரோத்திராதி பஞ்ச ஞானேந்திரியங்களும் வாக்கு முதலிய பஞ்சகர்மேந்திரியங்களும் சப்த முதலிய ஐந்து விஷயங்களும் பிராணாதி பஞ்ச வாயுக்களும் மன முதலிய அந்தக்கரண சதுஷ்டயமும் ஆகிய இவ்விருபத்து நான்கு தத்துவங்களும் சேர்ந்து ஸ்தூல சரீரமாம். இதற்கு அவஸ்தை ஜாக்கிரம். இவ்விரண்டற்கும் விசுவன் அபிமானி, கிரியை சக்தி, ரஜஸு குணம், நேத்திரம் ஸ்தானம்; யுக்தமானது போகம் இவற்றோடு கூடிய ஆத்மா ஜீவாத்மாவாம். அவனே வியாவகாரிக ஜீவன். இவ்வளவும் சேர்ந்து அகார அர்த்தமாம். இதற்கு, पंचीकृतपंचमहाभूतानि तत्कार्याणि विराडित्युच्यते ॥ एतत् स्तूलशरीरमात्मनः इन्द्रियैरर्थोपलब्धिर्जागरितं तदुभयाभिमान्यात्मा विश्वः ॥ एतत्त्रयमकारस्यार्थः ॥ என்பது சுருதி.

(உ) ஞானேந்திரியங்களைந்தும் கன்மேந்திரியங்களைந்தும் பிராணாதிவாயுக்களைந்தும் மனோபுத்திகளிரண்டுமாகிய பதினேழு தத்துவங்களோடு கூடிய ஆந்தராத்மாவாகிய லிங்கமே ஹிரண்யகர்ப்பம். அதுவே ஸூக்ஷ்மசரீரம். இச்சரீராபிமானி தைஜசனாகிய ஜீவன், சொப்பனம் அவஸ்தை, இச்சை சக்தி, சாத்வீகம் குணம், கண்டம் ஸ்தானம், சுவேச்சை போகம் என்னுமிவற்றோடுகூடி வியாபித்துள்ள ஆத்மா ஆந்தராத்மாவாம். அவனே பிராதிபாஸிக ஜீவன். இவ்வளவும் சேர்ந்து உகாரார்த்தமாம். இதற்கு. **अपंचीकृतपंचमहाभूतानि तत्कार्याणि सप्तदशकं लिंगं भौतिकं हिरण्यगर्भं इत्युच्यते । एतत्सूक्ष्मशरीरमात्मनः ॥ करणेषूपसंहृतेषु जागरितसंस्कारजः प्रत्ययः सविषयः स्वप्नः तदुभयाभिमान्यात्मा तैजसः ॥ एतत्त्रयमुकारस्यार्थः ॥** என்பது சுருதி.

(௩) முற்கூறப்பட்ட ஸ்தூல ஸூக்ஷ்மசரீரங்கள் இரண்டற்கும் காரணமாதலால் காரண மெனப்படும் அவ்வியாகிருதமாகிய மகதகங்காரம் காரணசரீரம். அதுவே முக்குணகர்ப்பமாம். அதன் அபிமானி பிராஞ்ஞனென்னும் ஜீவனும் இதற்குச் சுஷுப்தி

அவஸ்தை, திரவியம் சக்தி, தாமசம் குணம், இருதயம் ஸ்தானம், ஆநந்தம் போகம். இவற்ரோடு கூடி வியாபகமான ஆத்மா பரமாத்மாவாம். அவனே பாரமார்த்திக ஜீவன். இது மகாரார்த்தமாம். இதற்கு, **शरीरद्वय कारण मात्माज्ञानं साभासमव्याकृतमित्युच्यते एतत्कारणशरीरमात्मनः ॥ तच्च न सत् नासन्नापि सदसत् न भिन्नं नाभिन्नं नापिभिन्नाभिन्नं कुतश्चिन्न निरवयवं न सावयवं नोभय । केवलब्रह्मात्मैकत्वज्ञानापनोद्यं सर्वप्रकारकज्ञानोपसंहारो बुद्धेः कारणं सुषुप्तिः तदुभयाभिमान्यात्मा प्राज्ञः ॥ एतत्त्रयं मकारस्यार्थः ॥** என்பது சுருதி.

**काकीमुखककारान्त ईकारश्चेतनाकृतिः ॥ अकारस्यतु लुप्तस्य कोऽर्थः तंप्रतिपद्यते** என்பது பாட்டமாயின் அதற்குப் பொருள் இதுவாம்:— **काकीमुख** (காகீமுக) என்பது பிரஹ்மாண்டத்துவம். **क** (க) காராந்தமென்பது **क** (க) காரத்தி கடைசி எழுத்தாகிய

---

* இந்நூலின் அ, கூ- ௧0-வது பக்கங்களிலுள்ள சுருதிகள் மூன்றன்பொருளை ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவிராஜகாசாரியவர்ய சங்கராசார்யசுவாமிகளியற்றிய பஞ்சீகரண (மொழிபெயர்ப்பு) நூலின் வார்த்திகத்தின் ௭, கூ, ௧௩-வது பக்கங்களிற் காண்க.

अ (அ) காரம். அதனால் சொல்லப்படுவது புருஷனாகிய பிரஹ்மமே. ई (ஈ) காரம் மூலப்பிரகிருதி. அது சங்கற்பிக்கும் வடிவினதாகிய சக்தியாம். ஆதலால் काकी (காகீ) என்னும் சொல்லினால் பிரகிருதி புருஷ வடிவமான ஜீவனாகின்றான். அதில் பிரகிருதி லோப மடைந்த अ (க) காரத்திற்கு (பிரஹ்மத்திற்கு) அர்த்தம் யாது? (அதைவிட வேறில்லை யென்பதாம்.) काकी காகீ) என்பதின் क (க) காரத்தின்மேல் வந்த अ (அ) காரத்திற்கு எதுபொருளோ, அதனை (லக்ஷ்ய சொரூபத்தை) அவ்வுபாசகன் அடைகின்றான் என்பது பொருள்.

அதற்குச் சுருதி "आप्लवस्व प्रप्लवस्व अण्डीभव च मा मुहुः सुखादिदुःखनिधनां प्रतिमुंचस्व स्वां पुरम् ॥ என்பதாம்.

ஜநந மரண ஏதுவான சம்சாரத்தைவிடு, சம்சாரத்துக்குக் காரணமான மனோவியாபாரத்தையும்விடு. மறுபடியும் பிரஹ்மாண்டமுடையவனாகாதே. எனனின் அங்ஙனமாதல் இகசுகத்திற்கு ஏதுவும் துக்க காரணமுமா யிருக்கின்றது. ஆதலால் தனது ஸ்தூல சூக்ஷ்ம காரணதேகங்களாகிய புரங்களை விடுக,

ஜீவன் முக்தனுகக்கடவாய் என்பது மேற்கூறிய சுருதியின் அர்த்தமாம்.

இச்சுலோகத்திற்கு அகார உகார மகார வடிவமாகிய * அ. பிரணவத்தை உபாசிப்பவன் பிரஹ்மாத்ம பதத்தை அடைகின்றுன் என்பது பொருள். (எ)

(அ-கை) இவ்வாறு பிராணயாமபரனுகிய யோகதாரணேபாசகனுக்கு அவாந்தரவடிவ பலத்தையும் கூறுகின்றுர்:—

**गच्छन् स्तिष्ठन् सदाकालं वायुस्वीकरणम्परम् ।**
**सर्वकालप्रयोगेन सहस्रायुर्भवेन्नरः ॥ ८ ॥**

போகும்போதும் இருக்கும்போதும் எப்போதும் வாயுவை யுட்கொள்ளுதல் (பிராணயாமஞ் செய்தல்) மேலானதாம். இவ்வாறு எப்போதும் செய்வதனுல் நரன் (நூறு வயதுள்ள புருஷன்) ஆயிரம் ஆண்டு ஆயுளுடையவனுகின்றுன். (அ)

(அ-கை) அங்ஙனமாயின்? பரமப்பிரயோஜனம் எப்போது உண்டாகும், எனக் கூறுகின்றுர்:—

---

* அ. இப்பிரணவ உபாசனையை விரிவா யறிய விரும்புவோர் விசாரசாகர ரு-வது தரங்கத்திற் காண்க.

**यावत्पश्येत् खगाकारं तदाकारं विचिन्तयेत् ॥**

ஹம்ஸவடிவ (பிரஹ்மாகார)த்தைச் சாக்ஷாத்கரிக்கும் வரையில் அவ்வடிவமாகச் சிந்திக்க.

(அ-கை) அத்தன்மைய சாக்ஷாத்காரத்தின் பொருட்டு ஆத்மஜகங்களின் அபேதத்தியானத்தைக் கூறுகின்றார்:—

**खमध्ये कुरु चात्मानमात्ममध्ये च खं कुरु ।**

**आत्मानं खमयं कृत्वा न किञ्चिदपि चिन्तयेत् ॥ ९ ॥**

தகர (இருதய ஆகாயத்தின் மத்தியில் பரமாத்மாவைச் செய் அதாவது இவ்வாகாயம் பரமாத்மாவினும் வேறன்றெனப்பாவி, பரமாத்மாவில் ஆகாயத்தைச்செய் அதாவது அப்பரமாத்மாவில் ஆகாயத்திற்கு உபாதானமெனப் பாவி.

அல்லது "**आकाशशरीरं ब्रह्म**— ஆகாய சரீரம் பிரஹ்மம்" என்னும் சுருதியினல் ஆகாய சத்தத்தால் ஜீவன் சொல்லப் படுகின்றது. அவ்விரண்டன் ஐக்கியத்தை யறிந்து ஒன்றனையும் சிந்திக்கலாகாது. (கூ)

(அ-கை) இவ்வாறு முற்கூறியவிதத்தால் யோகியாய்ப் பிரஹ்மஞான நிஷ்டனே யாகின்றனெனக் கூறுகின்றார்:—

स्थिरबुद्धिरसंमूढो ब्रह्मविद्ब्रह्मणि स्थितः ।
बहिर्व्योम्नि स्थितं नित्यं नासाग्रे च व्यवस्थितम् ॥
निष्कलं तं विजानीयात् श्वासो यत्र लयं गतः ॥ १० ॥

யோகதாரணையினால் நிலைத்தபுத்தியுடையவனும் அஞ்ஞான நீங்கியவனுமாகிய பிரஹ்மஞானி பிரஹ்மத்தில் நிற்கின்றான். அந்த வெளியாகாயத்தில் நிற்கும் நித்தியமும், சுவாசம் லயமாகும் இடமான நாசிநுனியி லிருப்பதுமாகிய நிஷ்களமான அந்தப்பிரஹ்மத்தை அறியவேண்டும் (௧௦)

(அ-கை) பிரஹ்மநிஷ்டனது மனதின் நிச்சலத்தன்மையின் பொருட்டுத் தாரணா விசேஷத்தைக் கூறுகின்றார்:—

पुटद्वयविनिर्मुक्तो वायुर्यत्र विलीयते ।
तत्र संस्थं मनः कृत्वा तं ध्यायेत्पार्थ ईश्वरम् ॥ ११ ॥

நாசித்துவார மிரண்டினின்றும் வெளிப்பட்ட வாயுவானது எங்கு இலயமாகின்றதோ, அங்கு மனதை நிறுத்தி அந்த ஈசுவரனைப் பார்த்தா! தியானஞ் செய்யவேண்டும். (அதனால் மனதில் நிச்சலத்தன்மை கிடைத்து விடும்.) (௧௧)

(அ-கை) அந்தக் கிரமத்தினையே கூறுகின்றார்:—

निर्मलं तं विजानीयात् षडूर्मिरहितं शिवम् ॥

प्रभाशून्यं मनःशून्यं बुद्धिशून्यं निरामयम् ।

सर्वशून्यं निराभासं समाधिस्थस्य लक्षणम् ॥ १२ ॥

அந்த ஈசுவரனை நிர்மலமும் * ௬ ஷடூர்மியில்லாததும் மங்கலவடிவமுமாக அறிய வேண்டும். (அது) விருத்திவடிவப் பிரபையி (பிரகாசமி)ல்லாததும் மனமில்லாததும் புத்தி (ஆசத்தி) யில்லாததும் நிராமயமுமாம். சர்வசூன்னியமும் (தன்னின் வேறாகிய வஸ்துக்கள் யாவும் மித்தையாதலால் ஆநந்தைகரஸமும்) நிராபாசமு (பிரமமின்றியது)மான சமாதி அதன் (தியானத்தின்) லக்ஷணமாம். (௧௨)

(அ-கை) அச்சமாதியில் நிலைத்தவனுக்கு லக்ஷணம் யாதென்று ஆசங்கித்துக் கூறுகின்றார்:—

त्रिशून्यं यो विजानीयात्स तु मुच्येत बन्धनात् ॥ १३ ॥

(பிரபாசூனியமுதலிய) முச்சூனியத்தையும் எவனறி

---

* ௬. ஜநநம், மரணம், பசி, தாகம், ஹர்ஷம் (சந்தோஷம்) சோகம் என்பன சம்சாரசமுத்திரத்தின் ஷடூர்மி (ஆறு அலை)களாம்.

கின்றானோ, அவன் அப்பொழுதே பந்தத்தினின்றும் விடுபடுகின்றான்.

இதனால் ஜாக்கிரமுதலிய மூன்றவஸ்தைகளின் சூநியத்தன்மையும் காட்டப்பட்டது. (௧௩)

(அ-கை) இவ்வாறான ஜீவன்முக்தனுக்குத் தேகமுதலியவற்றில் அபிநிவேசமில்லையெனக் கூறுகின்றார்:—

स्वयमुच्चलिते देहे देही न्यस्तसमाधिना ।
निश्चलं तं विजानीयात् समाधिस्थस्य लक्षणम् ॥ १४॥

தானே (அநாதிபிராரப்தகர்மவாசனாவசத்தால்) சஞ்சரிக்கும் தேகத்தில் தேகியா(ஜீவனா)னவன் பொருந்திய சமாதியினால் நிச்சலமான அந்த ஈசுவரனை யறிகின்றான். இது சமாதியிலிருப்பவனது லக்ஷணம். (௧௪)

(அ-கை) ஞேயத்திலும் ஆத்மலக்ஷணத்தைக் கூறுகின்றார்;—

अमात्रं शब्दरहितं स्वरव्यञ्जनवर्जितम् ।
बिन्दुनादकलातीतं यस्तं वेद स वेदवित् ॥ १५ ॥

மாத்திரை (குறில் நெடில் அளபெடை) யின்றியதும், சப்தமின்றியதும், உயிர்மெய்களின்றியதும்,

பிந்து (அநுஸ்வார) நாத (தொண்டையைச் சுருக்கிய போது உண்டாகும் மணியின் ஓசையைப் போன்ற அநுகரண ஒலி) கலை (நாதத்தின் ஏகதேசங்)களுக்கப்பாற்பட்டதுமாகிய அதனை அறிந்தவன் எவனோ அவன் வேதமுணர்ந்தவனாவன். (கரு)

(அ-கை) இவ்வாறு அடைந்த ஆத்மதத்துவஞான முடையவனுக்கு அசம்பாவனை விபரீதபாவனை முதலியவை நீங்கியபோது செய்யத்தக்கது ஒன்றுமில்லை யென்று கூறுகின்றார்:—

प्राप्ते ज्ञानेन विज्ञाने ज्ञेये च हृदि संस्थिते ।
लब्धशान्तिपदे देहे न योगो नैव धारणा ॥ १६ ॥

(சாஸ்திராசாரிய வுபதேசத்திலுண்டாகும்) ஞானத்தினால் பிரஹ்மஞான மடைந்தகாலத்தும், ஞேயம் இதயத்திற் பிரத்தியக்ஷமாகுங்காலத்தும், தேகோபாதியுள்ளவனும் ஜீவன் சாந்திபதத்தை யடைந்த காலத்தும் யோகமில்லை, தாரணையுமில்லை.

(அ-கை) இவ்வாறு ஆத்மதத்துவ அபரோக்ஷ ஞானி முக்தனாய் ஈசுவரனே யாகின்றான் என்று அவனுடைய சொரூபத்தைக் கூறுகின்றார்:—

यो वेदादौ स्वरः प्रोक्तो वेदान्ते च प्रतिष्ठितः ।
तस्य प्रकृतिलीनस्य यः परः स महेश्वरः ॥ १७ ॥

எந்தஸ்வரம் வேதத்தின் முதலிற் சொல்லப்பட்டிருக்கின்றதோ, எது வேதத்தின் முடிவிலும் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கின்றதோ, பிரகிருதியின் லயமாகிய அதற்கு (பிரணவத்திற்கு) எது மேலானதாயிருக்கின்றதோ, அது மகேசுவரனும். அந்த மகேசுவரனேயாவன் அவ்வாத்மதத்துவஞானி, வேறல்லன் என்பது பொருள். மூலசுலோகத்தில் உம் என்னும் சொல்லால் வேதமத்தியிலும் வைக்கப்படிருக்கிறதோ என்பது கொள்ளத்தக்கதாம். (கஎ)

(அ-கை) ஆத்மதத்துவாபரோக்ஷ அநுபவமுண்டாவதற்குமுன் எந்த எந்தச் சாதனங்கள் சாதிக்கத்தக்கனவோ, ஞானம் கிடைத்தபின் எந்தச் சாதனங்கள் அவசியமன்றோ, அவை எல்லாவற்றையும் திருஷ்டாந்தவாயிலாகப் பிரகடஞ் செய்கின்றார்:—

नावार्थी हि भवेत्तावत् यावत्पारन्न गच्छति ।
उत्तीर्णे तु सरित्पारे नौकायाः किम्प्रयोजनम् ॥ १८ ॥

எதுவரையில் கரையைச் சேரவில்லையோ, அது வரையில் கப்பலை விரும்பியவனாகுக. கரையேறிய பின் கப்பலால் என்ன பிரயோஜனம்? ஒன்றுமில்லை என்பது பொருள்.

அதுபோல இங்கும் ஆத்மாபரோக்ஷ முண்டான பின் சாஸ்திரமுதலிய சுமையால் என்ன பிரயோஜன மென்பது தாற்பரியம். (௧௮)

(அ-கை) அதனையே வேறுவிதத்தால் திருஷ்டாந்தத்தோடு கூறுகின்றார்:—

ग्रन्थमभ्यस्य मेधावी ज्ञानविज्ञानतत्परः ।
पलालमिव धान्यार्थी त्यजेत् ग्रन्थमशेषतः ॥ १९ ॥

சாஸ்திரத்தை யப்பியசித்து மேதாவியான ஞான (பரோக்ஷஞான) விஞ்ஞான (அபரோக்ஷஞான) முடையவன் தானிய விருப்புடையோன் தாளை யெறிந்து விடுவது போலச் சாஸ்திரங்க ளெல்லாவற்றை யும் விடவேண்டும். (௧௯)

(அ-கை) இதுவுமது:—

उल्काहस्तो यथा कश्चित् द्रव्यमालोक्य तां त्यजेत् ।
ज्ञानेन ज्ञेयमालोक्य ज्ञानम्पश्चात्परित्यजेत् ॥ २० ॥

கொள்ளிக்கட்டையைக் கையிலுடையவன் அந்தகாரத்திலுள்ள ஓர் பதார்த்தத்தைப் பார்த்துக்கொண்டு அதனை யெறிந்துவிடுவது போல ஞான (ஞானசாதன)த்தால் ஞேயத்தை யறிந்து பின் ஞானத்தை விடவேண்டும். (௨௰)

(அ-கை) அபரோக்ஷஞானம் உண்டாகவே, பிரயோஜனமில்லாமையால் சாதனம் தள்ளத்தக்கதாமென்று வேறு திருஷ்டாந்தத்தினும் கூறுகின்றார்:—

**यथामृतेन तृप्तस्य पयसा किम्प्रयोजनम् ।**

**एवन्तत्परमं ज्ञात्वा वेदैर्नास्ति प्रयोजनम् ॥ ॥ २१ ॥**

அமுதத்தினால் திருப்தியடைந்தவனுக்குப் பாலினால் என்ன பிரயோஜனம்? ஒன்றுமில்லை. அதுபோல அந்த மேலானவஸ்துவை யறிந்தால் அதன்பின் வேத (உபநிடத)ங்களால் பிரயோஜனமில்லை. (உக)

(அ-கை) தத்துவஞானிகளுக்கு விதிநிஷேதாதிகர்த்தவ்வியங்கள் சிறிதுமில்லையென்று கூறுகின்றார்:-

**ज्ञानामृतेन तृप्तस्य कृतकृत्यस्य योगिनः ।**

**न चास्ति किञ्चित्कर्तव्यमस्तिचेन्न स तत्त्ववित् ॥ २२ ॥**

(ஆநந்ததகரஸவடிவ) ஞானமிர்தத்தால் திருப்தி யடைந்த கிருதகிருத்தியனாகிய யோகி (முக்தனு) க்குச் சிறிதும் கர்த்தவ்வியமில்லை. இருக்குமாயின் அவன் தத்துவஞானியல்லன். அவன் செய்யும் காரியங்கள்யாவும் உலகரக்ஷணையின் பொருட்டேயாம். கர்த்தவ்வியபுத்தியினா லன்றென்பது பொருள். (உஉ)

(அ-கை) அர்த்தஞானமின்றிக் கேவலம் வேதத்தைப் படித்தல் மாத்திரத்தால் அறியப்படுந் தன்மையில்லை. ஆனல் வேதத்தின் தாறபரியத்தைக் கோசரிக்கும் பிரஹ்மஞானத்தினாலேயே வேதவித்துத் தன்மையாம் என்று கூறுகின்றார்:—

तैलधारामिवाच्छिन्नं दीर्घघण्टानिनादवत् ।
अवाच्यं प्रणवस्यार्थं यस्तं वेद स वेदवित् ॥२३॥

இடைவிடாத தைலதாரையைப்போலும் நீண்ட மணியோசையினைப் போலும் அவாச்சியமான பிரணவத்தின் அர்த்தத்தை எவன் அறிகிறானே அவனே வேதமுணர்ந்தவன். (உ௩)

(அ-கை) தத்துவஞானியின் சமாதி சாதனங்களைக் கூறுகின்றார்:—

आत्मानमरणिं कृत्वा प्रणवं चोत्तरारणिम् ।
ध्याननिर्मथनाभ्यासाद्देवं पश्येन्निगूढवत् ॥ २४ ॥

ஆத்மாவை அரணியாக்கிப் பிரணவத்தை மேலரணியாக்கித் தியானமாகிய கடைதலை அப்பியசித்தலால் மிக்க ரகசியமாயுள்ள தெய்வத்தைப்பார்க்கலாம். (௨௪)

(அ-கை) அபரோக்ஷாநுபவபரியந்தம் சுயம்பிரகாச பிரஹ்மதாரணையைக் கூறுகின்றார்:—

तादृशं परमं रूपं स्मरेत्पार्थ ह्यनन्यधीः ।
विधूमाग्निनिभं देवं पश्येदत्यन्तनिर्मलम् ॥ २५ ॥

பார்த்தா! புகையின்றிய நெருப்பைப் போன்ற பிரகாசமுள்ளதும் அத்தியந்த நிர்மலமானதுமான தெய்வத்தை (ஸ்வப்பிரகாச பரமாத்மாவை)ப் பார்க்கும் வரையில் அத்தன்மைய பரமவடிவத்தை அந்நியமின்றிய புத்தியுள்ளவனாய்ச் சிந்திக்கவேண்டும். (௨௫)

(அ-கை) பிரஹ்மசொரூபத்தைப் பிரகடனஞ் செய்யும் நிமித்தத்தால் பாவனைக் கிரமத்தினையே விரிக்கின்றார்:—

दूरस्तोऽपि न दूरस्थः पिण्डस्थः हिण्डवर्जितः ।
विमलः सर्वतो देही सर्वव्यापि निरञ्जनः ॥ २६ ॥

தேகி தூரத்திலிருப்பவனாயிருந்தும் (இந்திரியங்களுக்குப் பரோக்ஷம்போ லிருக்கின்றவனாயினும்) தூரத்திலிருப்பவனல்லன் (பரோக்ஷத்திலிருப்பவனாகான்; என்றும் அபரோக்ஷனே) பிண்டத்திலிருப்பவனாயினும் (சரீர சம்பந்தாத்தியாசத்தால் பரிச்சின்னன்போற் றோற்றினும்) பிண்டத்திலிருப்பவனல்லன். சரீரசம்பந்தாத்தியாச மின்றியவனாகின்றான். தேகியானவன் எல்லாவற்றாலும் நிர்மலனாயும் சர்வவியாபியாயும் நிரஞ்சன (ஸ்வப்பிரகாசனாயு மிருக்கின்றான். (உசா)

(அ-கை) தேகாத்தியாசத்தினால் தோற்றும் கர்த்திருத்துவ போக்திருத்துவமுதலியன ஆத்மாவிற்கில்லையெனக் கூறுகின்றார்:—

कायस्थोऽपि न कायस्थः कायस्तोऽपि न जायते ।
कायस्तोऽपि न भुञ्जानः कायस्तोपि न बध्यते ।
कायस्थोपि न लिप्तस्स्यात्कायस्थोपि न बध्यते ॥ २७ ॥

தேகி காயத்திலிருப்ப (சரீராத்தியாசமுடைய) வனாயினும் காயத்திலிருப்பவனல்லன். (சரீரநிமித்தகமான பந்தமில்லாதவனாகின்றான்). காயத்திலிருப்பவனாயினும் (ஜன்மாதிகளையுடைய சரீரத்திலிருப்பவனாயினும்) பிறப்பதில்லை. காயத்தி (போகசாதனவடிவ சரீரத்தி)லிருப்பவனாயினும் புசிப்பதில்லை. (பந்தத்திற்கேதுவான) காயத்திலிருப்பவனாயினும் கட்டப்படுகிறதில்லை. காயத்திலிருப்பவனாயினும் (சுகதுக்காதி ஏதுவான தேகசம்பந்தமுடையவனாயினும்) பற்றுள்ளவனாதலில்லை (அச்சுகதுக்காதி சம்பந்தமின்றியவனா யிருக்கின்றான்). காயத்துள்ளவனாயினும் (மரண தர்மத்தையுடைய தேகத்திலிருப்பவனாயினும் வதிக்கப்படுவதில்லை (கொல்லப்படுவதில்லை).

(அ-கை) எதன் அத்தியாசத்தினால் ஆத்மமோகத்தினின்று சம்சாரமுண்டாயிருக்கின்றதோ, அதன் அபவாதத்தால் அங்கேயே தேகமந்தக்கரண முதலியவற்றில் ஆத்மா விசாரிக்கத் தக்கதாமெனக் கூறுகின்றார்:—

**तिलमध्ये यथा तैलं क्षीरमध्ये यथा घृतम् ।**
**पुष्पमध्ये यथा गन्धः फलमध्ये यथा रसः ॥**
**काष्ठाग्निवत् प्रकाशेत आकाशे वायुवच्चरेत् ॥ २८ ॥**

எள்ளின்கண் ணெய்போலும், பாலினுள் நெய் போலும், புஷ்பமத்தியில் வாசனைபோலும், பழநடுவில் இரசம் போலும், கட்டையில் அக்கினிபோலும் பிரகாசிக்கின்றது. எள்ளைப் பிழிந்தபோது எண்ணெயும் பாலைக் கடைந்தபோது நெய்யும், புஷ்பம் மலர்ந்தபோது வாசனையும், பழத்தில் தோல் முதலியவற்றை நீக்கியபோது இரசமும், கட்டையைக் கடைந்தபோது அக்கினியும் வெளிப்படுவது போல, ஆத்மா அந்நமயாதி பஞ்சகோசங்களி னிடையில் தள்ளத்தக்க அம்சங்களைத் தள்ளுதலால் ஆநந்தவடிவமாய்ச் சுவப்பிரகாசமாய் வெளிப்படுகிறது என்பது பொருள். ஆகாயத்தில் வாயுபோல் எங்கும் வியாபகமாயிருந்தும் சலிக்கின்றது. (உஅ)

(அ-கை) அதனையே தார்ஷ்டாந்தத்தில் செவ்வையாகப் பொருத்துகின்றார்:—

**तथा सर्वगतो देही देहमध्ये व्यवस्थितः ।**
**मनः स्थो देहिनां देवो मनोमध्ये व्यवस्थितः ॥ २९ ॥**

அப்படியே எல்லாவற்றினுமுள்ள தேகியாகிய ஜீவனானவன் (நாநாவாகிய திரியக்குமுதலிய, தேகமத்தி

யிலி (பலவேறுபட்ட எள்ளில் எண்ணெய் போல ஒருமையாகவி)ருக்கின்றான். (தேகபேதத்தால்வெவ்வேறான) தேகிகளது மனதிலுள்ள தேவன் மனதின் மத்தியில் (சாக்ஷிவடிவமாக) நிலைத்திருக்கிறான். (உகூ)

(அ-கை) அத்தன்மைய பிரஹ்மாபரோக்ஷத்தால் விடுபடுகின்றார்கள்:—

मनःस्थं मनमध्यस्थं मध्यस्थः मनवर्जितम् ।
मनसा मन आलोक्य स्वयं सिध्यन्ति योगिनः ॥ ३० ॥

மனதிலுள்ள (மனதில் விளைபட்ட)தும், மனமத்தியிலு (மனதிற்குச் சாக்ஷிவடிவமாயு)ள்ளதும், மத்தியிலுள்ளதும் (சர்வசாக்ஷிவடிவமும்),(சங்கற்பவிகற்ப) மனமின்றியதுமான மனதை (ஞானவடிவ ஆத்மாவைப்) பரிசுத்தமனதால் பார்த்து [அதனை விஷயிக்கும் அபரோக்ஷ சரம 'கடைசி' விருத்தியைபடைந்து] யோகீசுவரர் (ஞானி)கள் தாமே அநுபவசித்தியுடையவராகின்றனர். அவித்தையின் நீக்கத்தால் முக்தர்களாகின்றார்கள் என்பது பொருள். (௩௦)

(அ-கை) இப்போது முற்கூறப்பட்ட யோகிகளின் லக்ஷணத்தை வர்ணிக்கின்றார்:—

आकाशं मानसं कृत्वा मनः कृत्वा निरास्पदम् ।
निश्चलन्तं विजानीयात् समाधिस्थस्य लक्षणम् ॥ ३१ ॥

மனதை ஆகாய (நிருவிகற்ப)மாக்கி, சங்கற்ப விகற்பவடிவ மனதைப் பற்றி (சார்பி)ல்லாததாக்கி நிச்சலமான கிரியையின்றிய ஈசனைக அவனை யறியவேண்டும். இதுவே சமாதி யுடையவன் இலக்கணம். (௩௧)

(அ-கை) ஆரூடன் (சொரூபத்திலேறியவன்) லக்ஷணம் சொல்லப்பட்டது. இனி ஏறும் விருப்புடையோனது (அப்பியாசியின்) உபாயத்தை கூறுகின்றார்:—

योगामृतरसं पीत्वा वायुभक्षः सदासुखी ।
यममभ्यसते नित्यं समाधिर्मृत्युनाशकृत् ॥ ३२ ॥

யோகாமிருத ரசத்தைக் குடித்து வாயுவைப் புசிக்கும் சதாசுகியானவன் நித்தியமும் மனோ நிக்கிரகத்தை யப்பியசிக்கவேண்டும். அது மரணத்தைக்கெடுக்கும் (அமிர்தவடிவமான) சமாதி யெனப்படும். (௩௨)

(அ-கை) அத்தன்மைய சமாதியிலுள்ளவன் லக்ஷணத்தைக் கூறுகின்றார்:—

ऊर्द्ध्वशून्यमधःशून्यं मध्यशून्यं यदात्मकम् ।
सर्वशून्यं स आत्मेति समाधिस्थस्य लक्षणम् ॥ ३३ ॥

எதன் சொரூபம் மேற்சூநியமும் (மேலிடப் பரிச்சேதமின்றியதும்) கீழ்ச்சூநியமும் (கீழிடப் பரிச்சேதமின்றியதும்) நடுச்சூநியமும் (நடுவிடப்பரிச்சேதமின்றியதும்) சர்வசூநியமு (தேசகாலாதி பரிச்சேதமின்றியதும்)மா யிருக்கின்றதோ, அது ஆத்மாவென்றிருத்தல் **சமாதியிலிருப்பவனது இலக்ஷணமாம்.** (௩௩)

(அ-கை) இந்த ஏகாந்த திருஷ்டியுடையவனது விதிநிஷேதங்கடந்த தன்மையைக் கூறுகின்றார்:—

शून्यभावितभावात्मा पुण्यपापैः प्रमुच्यते ॥ ३४ ॥

யாவும் சூனியமாய்ப் பாவிக்கப்படுவதெனும் கருத்துடைய ஆத்மா (ஞானி) புண்ணிய பாவங்களினின்றும் விடுபடுகின்றான். (௩௪)

(அ-கை இவ்வாறு பகவானால் உபதேசிக்கப்பட்ட சமாதியில் விரோதத்தையும் அசம்பவத்தையும் அர்ஜுனன் கேட்கின்றார்:—

अर्जुन उवाच,

अदृश्ये भावना नास्ति दृश्यमेतद्विनश्यति ।
अवर्णमस्वरं ब्रह्म कथं ध्यायति योगिनः ॥ ३५ ॥

அர்ச்சுனன் :—

அதிருசியத்தில் பாவனையி (தியானமி) ல்லை, இத் திருசியமோ நசிக்கின்றது எனின், வர்ணரூபமின்றியதும் ஸ்வர (சப்த) மின்றியதுமான பிரஹ்மத்தை யோகிகள் எங்ஙனம் தியானிக்கின்றார்கள்? (௩௫)

(உ-கை) உன்றால் சொல்லப்பட்டது எதனால் பொருந்துகின்றதோ அத்தன்மைய சாவயவமூர்த்தி முதலியவற்றையுடைய தியானமன்று யாம் கூறியது; ஆனால் நிர்விசேஷப் பிரஹ்மத்தில் நிர்மலம் நிஷ்களம் என்னும் இவை முதலியவற்றால் வேதாந்தஜந்நிய விருத்திக்குக் கோசரமாந்தன்மையால் அது சம்பவிக்கிறதென்னும் அபிப்பிராயத்தால் கூறுகின்றார்:—

श्रीभगवानुवाच,

ऊर्ध्वपूर्णमधःपूर्णं मध्यपूर्णं यदात्मकम् ।
सर्वपूर्णं स आत्मेति समाधिस्थस्य लक्षणम् ॥ ३६ ॥

ஸ்ரீபகவான்:—

எதன் சொரூபம் மேலும் பூரணம், கீழும் பூரணம், நடுவும் பூரணம், எல்லாம் பூரணமாயிருக்கின்றதோ, அதுவே ஆத்மாவென்றிருத்தல் சமாதியிலிருப்பவனது லக்ஷணம்.

(அ-கை) அங்ஙனமாயின் இது சாலம்பனயோகமா? நிராலம்பனயோகமா? என்று இருவகையாக விகற்பித்து அதில் தோஷத்தைக் கூறிக் கூறுன்றார்:—

अर्जुन उवाच,

सालम्बस्याप्यनित्यत्वं निरालम्बस्य शून्यता ।
उभयोरपि दोषत्वात् कथं ध्यायन्ति योगिनः ॥ ३७ ॥

அர்ச்சுனன்:—

சாலம்பத்தி (மூர்த்தியுடையத)ற்கு அநித்தியத்துவமும் நிராலம்பத்தி (மூர்த்தியாதாரமின்றியத)ற்குச் சூனியத்துவமு (முயற்கொம்பொப்புமைய்)ம் உளது; இரண்டும் தோஷமுடையதாயிருத்தலின் யோகிகள் எங்ஙனம் தியானிப்பார்கள்? (௩௭)

(அ-கை) யாகம் தானம் முதலியவற்றால் சுத்தி யடைந்த அந்தக்கரணமுடையவனுக்கு வேதாந்த ஜந்நிய நிர்விசேஷப் பிரஹ்மகோசர விருந்தி சம்பவித்தலால் சூந்நியத்தன்மையில்லை யென்னும் அபிப்பிராயத்தால் கூறுகின்றார்:—

श्रीभगवानुवाच,

हृदयं निर्मलं कृत्वा चिन्तयित्वा ह्यनामयम् ।
अहमेकमिदं सर्वमिति पश्येत्परं सुखी ॥ ३८ ॥

ஸ்ரீ பகவான்:—

இதயத்தை நிர்மலமா(ஞானவிரோதியான ராகாதி தோஷமின்றியதா)க்கி அநாமயத்தை (ஈசுவரனை)ச் சிந்தித்துப் பரமசுகியானவன் "இவ்வெல்லாமும் யானே (எனக்கந்நியமொன்றுமில்லை)" என்று பார்க்கக்கடவன், (௩௮)

(அ-கை) அர்த்தவடிவமாயுள்ள ஜகத்து சப்தத்தால் நிரூபிக்கப்படுந்தன்மையினாலும், சப்தம் வர்ணவடிவமாகவும், வர்ணங்கள் பிரணவவடிவமாகவும், பிரணவம் பிந்து வடிவமாகவும், பிந்து நாதவடிவமாக

வும், நாதம் பிரஹ்மத்தியானஸ்தானவடிவமாகிய கலை வடிவமாகவும், பிரஹ்மத்தில் சமன்வயி (விவர்த்த மாய்ச் சம்பந்தி)த் திருத்தலினா, பிந்துநாதகலாதீத மாய் உள்ள பிரஹ்மத்தை தியானிக்க வேண்டு மென்று பகவானாற் சொல்லப்பட்டது அதனைவேறு பிரித்தறிய அர்ச்சுனன் கேட்கின்றான்:—

अर्जुन उवाच,

अक्षराणि समात्राणि सर्वे बिन्दुसमाश्रिताः ।
नादेन भिद्यते बिन्दुः स नादः केन भिद्यते ॥ ३९ ॥

அர்ச்சுனன்:—

மாத்திரைகளோடு கூடிய அகாராதி அக்ஷரங்கள் யாவும் பிந்துவை ஆசிரயித்திருக்கின்றன. நாதத்தால் பிந்து பேதிக்கப்படுகின்றது. அந்நாதம் எதனால் பேதிக்கப்படுகின்றது? இங்கு நாதமென்னும் சொல் கலையின் உபலக்ஷணமாம். (௩௯)

(அ-கை) இவ்வாறு வினவப்பட்டவராகிய பகவான் பிரஹ்மத்தில் பொருந்துகின்றதென்று கூறுகின்றார்:—

श्रीभगवानुवाच,

अनाहतस्य शब्दस्य तस्य शब्दस्य च ध्वनिः ।
ध्वनेरन्तर्गतंज्योतिर्ज्योतिरन्तर्गतं मनः ॥
तन्मनो विलयं याति तद्विष्णोः परमं पदम् ॥ ४० ॥

ஸ்ரீபகவான்:—

எந்த அநாகத (பராவஸ்தையடைந்த பிரணவ) சப்தத்தின் தொனி (சப்தம்) கேட்கப்படுகின்றதோ அத்தொனியினுள் ஜோதி (கலை)யுளது. அந்த ஜோதியினுள் (சப்தாதி பிரபஞ்சகாரணவடிவ) மனமுளது. அந்த ஜோதியில் மனம் ஒடுங்குகின்றது. அது வேதாந்த ஜந்நிய நிர்விகற்ப பிரஹ்மகோசர மனோ விருத்தி யொடுங்கிய இடம்) விஷ்ணுவின் (வியாபகமான ஆத்மாவின்) பரமபத (மேலான சொரூப)மாம். (சo)

(அ-கை) மீண்டும் அதனையே கூறுகின்றார்:—

ओंकारध्वनिनादेन वायोः संहरणान्तिकम् ।
निरालम्बं समुद्दिश्य तत्र नादो लयङ्गतः ॥ ४१ ॥

ஓங்காரத்தொனி வடிவநாதத்தோடு வாயுவடங்குதலே முடிவாகவுடைய நிராலம்ப (நிர்விசேஷ)ப் பிரஹ்மத்தை இலக்ஷியஞ் செய்ய ஆண்டு நாதம் லயமடைகின்றது. (ஆண்டு உள்ளதனை மேலாகிய பிரஹ்மபத மென்பர்.) (சுக)

(அ-கை) இவ்வாறு தியானப்பிரகாரத்தினல் சுத்தமாகிய அந்தக்கரணமுடைய ஆரூடனுக்குப் புண்ணிய பாவங்களிரண்டும் நீங்கப் பிரஹ்மசாயுஜ்யம் சொல்லப்படவே முமுக்ஷுவுக்குப் பரிசுத்தமில்லாத அந்தக்கரணத்தன்மையால் பிரஹ்மசாயுஜ்யம் சம்பவியாததாகவே, தர்மாதர்மங்கள் நீங்குதல் சம்பவியாமையால் அதன் வாயிலாக ஜநநமரணாதிகள் அவசியம் வர்த்தக்கனவாமென்று மனதில் நிச்சயித்துப் புநராவிருத்தியின் தன்மையை அர்ச்சுனன் கேட்கின்றான்:-

अर्जुनउवाच:—

भिन्ने पञ्चात्मके देहे गते पञ्चसु पञ्चधा।
प्राणैर्विमुक्तदेहे तु धर्माधर्मौ क गच्छतः॥ ४२॥

அர்ச்சுனன்:—

தேகம் பிராணவாயுவால் விடுபடுங்காலத்தில் பஞ்சபூதவடிவமான ஸ்தூலதேகம் பஞ்சபூதங்களிலும்

ஐந்து வகையாய்ப் பிரிக்கப்பட்டு நிற்கவே, தர்மாதர்ம (புண்ணியபாவ)ங்கள் எங்கே போகின்றன ? (௪௨)

(அ-கை) இவ்வாறு கேட்கப்பட்டவராகிய ஸ்ரீ பகவான் லிங்கசரீரத்தைத் தரித்துத்தன்மையால் நிற்கின்றதென உத்தரங் கூறுகின்றார்:—

श्रीभगवानुवाच :—

धर्माधर्मौ मनश्चैव पञ्चभूतानि यानि च ।
इन्द्रियाणि च पञ्चैव याश्चान्याः पञ्चदेवताः ॥ ४३ ॥

ஸ்ரீ பகவான்:—

தர்மாதர்மங்களும், மன(அந்தக்கரண)மும், பஞ்சபூதங்களும், (இருவகைப்) பஞ்சேந்திரியங்களும், அவற்றின் வேறாகிய பஞ்சதேவதைகளும், (௪௩)

ताश्चैव मनसा सर्वे नित्यमेवाभिमानतः ।
जीवेन सह गच्छन्ति यावत्तत्त्वं च विन्दति ॥ ४४ ॥

மனதோடு யாவும் எப்போதும் அபிமானிகளாயிருத்தலின், தத்துவத்தை யடையாத வரையில் ஜீவனோடு (ஜீவோபாதியாகிய லிங்கதேகத்தோடு) கூடவே செல்லுகின்றன. (௪௪)

(அ-கை) இவ்வாறு ஸ்தூலதேககலபத்திலும் தர்மாதர்மங்கள் லிங்கசரீரத்தையாசிரயித்து நிற்குமெனக்கூறின் லிங்கசரீரம் எப்போது பங்கமாமெனக் கேட்கின்றார்:—

अर्जुन उवाच,

स्थावरं जङ्गमञ्चैव यत्किञ्चित्सचारचरम् ।
जीवा जीवेन सिध्यन्ति स जीवः केन सिध्यति ॥ ४५ ॥

அர்ச்சுனன்:—

ஸ்தாவர ஜங்கமமென்னும் யாதொரு சராசரமாகிய (விசுவவடிவ) ஜீவர்களுண்டோ, அவர்கள் ஜீவ(தைஜச)னால் சித்திக்கின்றார்கள் (விசுவாபிமானத்தை விடுகின்றார்கள்). அந்தச்சீவன் யாரால் சித்திக்கின்றான் அதாவது எந்த ஏதுவால் தனது அபிமானத்தை விடுகின்றான்?

(அ-கை) இவ்வாறு கேட்கவே பிராஞ்ஞனால் தைஜஸன் சித்திக்கின்றான், துரியனால் பிராஞ்ஞன் சித்திக்கின்றான் என்று இம்முறையாகச் சித்திக்கின்றானென்றுத்தரம் கூறுகின்றார்:—

श्रीभगवानुवाच,

मुखनासिकयोर्मध्ये प्राणः सञ्चरते सदा ।
आकाशः पिबति प्राण स जीवः केन जीवति ॥ ४६ ॥

ஸ்ரீபகவான்:—

(காணப்படாத) எந்தப்பிராணன் வாய்க்கும் நாசிக்கும் மத்தியில் *எ. எப்போதும் சஞ்சரிக்கின்றதோ அந்தப்பிராணனை ஆகாசம் பருகுகின்றது. பின்னர் அச்சீவன் எதனால் ஜீவிக்கின்றான்?

ஜீவத்தன்மையை யுண்டுபண்ணும் அதிருஷ்ட நீக்கத்தால் நிரஞ்சனப் பிரஹ்மத்தன்மை யுண்டாகவே ஜீவத்தன்மையே இல்லை என்பது பொருள். (சா.)

---

* எ அஜபாமந்திரவடிவமாக ஒவ்வொரு தினத்திற்கும் ௨௧,௬௦௦ சுவாசம் செல்லுகிறது. இதனை அஜபாவடிவமாக 'हकारेण वहिर्याति सकारेण विशेत्पुनः ।. हंसहंसेति मंत्रो जीवो जपति सर्वदा ॥ ஹகாரத்தினால் வெளியிற் செல்லுகின்றன. ஸகாரத்தினால் மீண்டும் உள்ளே நுழைகின்றது. ஹம்ஸஹம்ஸ என்னும் மந்திரத்தை ஜீவன் எப்போதும் ஜபிக்கிறான்'' என்று சுருதி கூறுகின்றது.

(அ-கை) அங்ஙனமாயின் பிரஹ்மாண்ட முதலிய உபாதியோடு கூடிய பிரஹ்மத்திற்கு நிரஞ்சனத்துவம் எங்ஙனமுண்டாமென்று அர்ச்சுனன் கேட்கின்றான்:—

अर्जुन उवाच,

ब्रह्माण्डव्यापितं व्योम व्योम्ना चावेष्टितं जगत् ।
अन्तर्बहिश्च तद् व्योम कथं देवो निरञ्जनः ॥ ४७ ॥

அர்ச்சுனன்:—

பிரஹ்மாண்டத்தினால் வியாபிக்கப்பட்டது ஆகாயம்; ஆகாயத்தினால் சூழப்பட்டது ஜகத்து; அதனால் உள்ளும் வெளியும் ஆகாயமேயுளது; இவ்வாறாகவே தெய்வம் எங்ஙனம் நிரஞ்சனமா (வேறு பிரகாசாபேக்ஷையில்லாதது) யுளது?

(அ-கை) ஆகாயமுதலிய சர்வப்பிரபஞ்சமும் கற்பிதமாயிருத்தலால் யாவும் அசத்தியமென்னும் அபிப்பிராயத்தினாற் கூறுகின்றார்:—

श्रीभगवानुवाच,

आकाशो ह्यवकाशश्च आकाशव्यापितञ्च यत् ।

ஸ்ரீ பகவான்:—

ஆகாய(மகாகாய)மும் அவகாச (பரிச்சின்னா காய)மும் ஆகாசத்தினால் (ஆகாசதன்மாத்திரைவடிவமாகிய சப்தத்தினால்)வியாபிக்கப்பட்டதாம். (அதன் உபாதானத்தன்மையால் அதனினும் வேறாகாது என்பது பொருள்.)

(ஆ-கை) அங்ஙனமாயின் உபாதானமாகிய சப்தத்திற்கு வேறுபட்டதன்மை இருக்கின்றதெனக் கூறுகின்றார்:—

**आकाशस्य गुणःशब्दो निःशब्दं ब्रह्म उच्यते ॥ ४८ ॥**

அவ்வாகாயத்தின் குணம் சப்தம். (மித்தியாவடிவ ஆகாயத்தின் பரிணாமி உபாதானமாயிருத்தலானே தானும் மித்தையாம்). பிரஹ்மம் சப்தமின்றியதாம் (நிஷ்பிரபஞ்சமாம்).

அங்ஙனமே சத்தியாக்ஷரப் பிரஹ்மத்திற்கு அசத்தியத்தோடு சம்பந்தம் நிகழாமையால் நிரஞ்சன (அசங்க)த்துவம் பொருந்துகின்றது என்பது பொருள். (சஅ)

(அ-கை) இவ்வாறு பகவானால் சொல்லப்பட்டதில் அக்ஷரசப்தத்திற்குப் பகவான் கருதிய பொருளையறியாது லோகப் பிரசித்தமான வர்ணவடிவ அக்ஷரபுத்தியினால் வர்ணங்களுக்கு அக்ஷரத்துவம் (அழிவின்மை) சம்பவியாது என்னும் அபிப்பிராயத்தால் அர்ச்சுனன் கேட்கின்றான்:—

अर्जुन उवाच,

दन्तोष्ठतालुजिह्वानामास्पदं यत्र दृश्यते ।

अक्षरत्वं कुतस्तेषां क्षरत्वं वर्तते सदा ॥ ४९ ॥

அர்ச்சுனன்:—

பகவானே! எவ்வகாராதி அக்ஷரங்களில் பல், உதடு, அண்ணம், நாவென்பவற்றின் ஆசிரயத்தன்மை காணப்படுகின்றதோ அதனால் அவற்றிற்கு அக்ஷரத்துவம் ஏது? உற்பத்தி நாசமுடையதற்கு நாசம் அவசியமிருத்தலால் எப்போதும் அவற்றிற்கு க்ஷரத்துவம் (நாசமுடைமை) உளது. (௪௯)

(அ-கை) இவ்வாறு அபிப்பிராயம் அறியாத அர்ச்சுனனால் கேட்கப்பட்ட ஸ்ரீபகவான், தனாற்

சுருதப்பட்ட அக்ஷரசப்தார்த்தத்தை விளக்கிக் கூறு கினார்:—

श्रीभगवानुवाच,

अघोषमव्यञ्जनमक्षरञ्चाप्यतालुकण्ठोष्ठमनासिकञ्च ।
अरेखजातं परमूष्मवर्जं तदक्षरं न क्षरते कथञ्चित् ॥५०॥

ஸ்ரீபகவான்:—

* அ. கோஷமல்லாததும் வியஞ்சனமல்லாத

---

* அ. ஆரியமொழியின் உயிர்பதினைன்கும ஐவருக்கத்தின் ஈற்றெழுத்துக்கள் மூன்றும் य, र, ल, व, ह என்னும் ஐந்தும ஆகிய இம்முப்பத்திரண்டு எழுத்துக்களும் கோஷமெனப்படுகின்றன. மற்றவை அகோஷமெனப் படும்.

உயிரெழுத்துக்களை ஸ்வரமென்றும் அச் சென்றும் கூறுவர்

மெய்யெழுத்துக்களை வியஞ்சனமென்றும் ஹல் என்றும் கூறுவர்.

அண்ணத்தாற்றோன்றுவன इ, ई, च, छ, ज, झ, ञ, य, श, என்பனவாம். இவை தாலவ்யமெனப்படும்.

பல்லாற்றோன்றுவன लृ, त, थ, द, ध, न, ल, स என்பனவாம். இவற்றைத் தந்த்யமென்பர்.

உதட்டாற்றோன்றுவன उ, ऊ, प, फ, ब, भ, म, व என்பனவாம். அவற்றை ஒஷ்டியமென்பர்.

தும் ஸ்வர மல்லாததும் எழுத்துக்களின் பிறப்பிட மாகிய அண்ணம் பல் உதடுகளினுற் றோன்றுவன வல்லாததும் நாசியாற்றோன்றுவன வல்லாததும் வரி வடிவ எழுத்துக்களல்லாததும் ஊஷ்மங்க ளல்லாததுமாகிய பரம் எதுவோ அது அக்ஷரமாம். ஏனெனின் அது எப்போதும் க்ஷரி(நசி)ப்பதில்லை.

உபலக்ஷணத்தால் கண்டிய மூர்த்தன்யங்களும் கொள்ளப்படும். (௩௰)

---

अ, आ, क, ख, ग, घ, ङ, ह என்பன கண்டியம் (கண்டத்தாற்றோன்றுவன) எனப்படும்

ऋ, ॠ, ट, ठ, ड, ढ, ण, र, ष என்பன மூர்த்தன்யம் (சிரத்திற்றோன்றுவன) எனப்படும்.

ए, ऐ கண்டத்தாலவ்யம்,

ओ, औ கண்டோஷ்டியம்.

ङ, ञ, ण, न, म இவை அநுநாசிகம் (நாசியாற்றோன்றுவன)

श, ष, स, ह ஊஷ்மம் (சுவாசத்தாற்றோன்றுவன) எனப்படும்.

(அ-கை) இத்தன்மைய பிரஹ்மஞான உபாயத்தை அநுபவ தாட்டியத்தி(திடத்தன்மையி)ன் பொருட்டு மீண்டும் அர்ச்சுனன் கேட்கின்றான்:—

अर्जुन उवाच,

ज्ञात्वा सर्वगतं ब्रह्म सर्वभूताधिवासितं ।

इन्द्रियाणां निरोधेन कथं सिध्यन्ति योगिनः ॥ ५१ ॥

அர்ச்சுனன் :—

யோகிகள் இந்திரிய நிரோதத்தால் எல்லாவற்றின் கண்ணிருப்பதும் எல்லாப் பூதங்களுக்கும் அப்பால் வசிப்பதுமாயுள்ள பிரஹ்மத்தை அறிந்து எங்ஙனம் ஸித்திபெறுவார்கள்? (௫௧)

(அ-கை) இவ்வாறு கேட்கப்பட்டவராகிய பகவான் அந்த ஞானோபாயத்தினையே மீண்டும் கூறுகின்றார்:—

श्रीभगवानुवाच,

इन्द्रियाणां निरोधेन देहे पश्यन्ति मानवाः ।

ஸ்ரீ பகவான் :—

இந்திரியங்களின் நிரோதத்தால் மனிதர்கள் தேகத்தில் பிரஹ்மத்தை யறிகின்றார்கள்.

ஆதலால் தேகநிஷ்டத்துவமும் இந்திரிய நிஷ்டத்துவமும் ஞானோபாயமென்பது தாற்பரியம்.

(அ-கை) அதனின்மையில் ஞானமே இல்லையெனக் கூறுகின்றார்:—

देहे नष्टे कुतो बुद्धिर्बुद्धिनाशे कुतो ज्ञता ॥ ५२ ॥

தேகம் நஷ்டமாயின் புத்தி எது? (புத்தியும் நஷ்டமாகும்) புத்தி நஷ்டமானால் பிரஹ்மத்தையறியுந்தன்மை எது? தத்துவஞானமில்லாததாகவே அபரோக்ஷஞானி எது?

ஆதலால் தேகேந்திரியமுதலியவற்றால் செய்யப்படும் யாகம் தானம் சிரவணமுதலியனவே தத்துவஞானத்திற் காரணமென்பது தாற்பரியம். (௫௨)

(அ-கை) அத்தன்மைய காரணமும் எதுபரியந்தம் அநுஷ்டிக்கத்தக்கதாமென்று ஆசங்கித்து அவதியைக் கூறுகின்றார்:—

तावदेव निरोधः स्यात् यावत्तत्त्वन्नविन्दति ।
विदिते तु परे तत्त्वे एकमेवानुपश्यति ॥ ५३ ॥

எதுவரையில் தத்துவத்தை யடையவில்லையோ அதுவரையிற்றான் நிரோதமுடையவனாயிருத்தல் வேண்டும். பரதத்துவத்தைபுணர்ந்தகாலத்து ஒன்றையே காண்கின்றான்.

அதன்பின் சாதனங்களை அநுஷ்டிக்கும் பிரயாசையும் வேண்டியதில்லை. (௫௩)

(அ-கை) ஆதலால் அதுபரியந்தம் தத்துவஞானசாதனம் அநுஷ்டிக்கத்தக்கதாம் அது இல்லையாயின் அது சித்திக்கிறதில்லையெனக் கூறுகின்றார்:—

नवच्छिद्रान्विता देहाः स्रवन्ति गलिका इव ।
नैवं ब्रह्म न शुद्धिः स्यात् पुमान् ब्रह्म न विन्दति ॥५४॥

நவத்துவாரமுடைய (ஞானகாரணவடிவ) தேகங்கள் பொள்ளற்குடங்கள்போல் ஒழுகவிடுகின்றன (விருத்தியை எப்போதும் விஷயங்களிற் றள்ளிவிடுகின்றன). இவ்வாறாகவே சுத்தியில்லை பிரஹ்மம் (சுத்தமாயிருப்பதால்) தோற்றுகிறதில்லை. அதனால் புருஷன் பிரஹ்மத்தையடைகிறதில்லை.

(அ-கை) ஆதலால், தத்துவஞானபரியந்தம் சாதனத்தில் எத்தனஞ் செய்யவேண்டும், தத்துவஞா

னமுண்டாயின் விதிநிஷேதங்கடந்த தன்மையால் ஒரு முயற்சியும் செய்யவேண்டியதில்லை யென்னும் அபிப்பிராயமுடையவராய்க் கூறுகின்றார்:—

अत्यन्तमलिनो देहो देही त्वत्यन्तनिर्मलः ।
उभयोरन्तरं ज्ञात्वा कस्य शौचं विधीयते ॥ ९५ ॥

தேகம் அத்தியந்தம் மலினமானது. தேகி அத்தியந்தம நிர்மலன். இவ்விரண்டற்குமுள்ள பேதத்தையறிந்தபின் எதற்குச் சௌசம் விதிக்கப்படுகின்றது? தேகத்திற்கெனின் மலினமாயுள்ள தேகம் சுத்தியடையாது. தேகிக்கெனின் இயல்பாகவே சுத்தமாயுள்ளதற்குச் சுத்தி வேண்டியதில்லை யென்பது பொருள்.

முதல் அத்தியாயம முற்றிற்று.

ஸ்ரீ க்ருஷ்ணபரப்ரஹ்மணே நம:

# இரண்டாம் அத்தியாயம்.

ஆரூடன் (ஆத்மபதத்தில் ஏறியவன்) ஆருருக்ஷு (ஏறவிருப்புடையோன்-அப்பியாசி) என்னும் இருவர் சொரூபங்களும் சொல்லப்படுகின்றன.

(அ-கை) அதில் ஆரூடனுக்குப் பிம்பஐக்கியம் எங்ஙனம் உண்டாமென்று அர்ச்சுனன் கேட்கின்றான்:—

अर्जुन उवाच,

ज्ञात्वा सर्वगतं ब्रह्म सर्वज्ञं परमेश्वरम् ।
अहं ब्रह्मेति निर्देष्टुं प्रमाणं तत्र किं भवेत् ॥ १ ॥

அர்ச்சுனன்:—

பகவானே! எல்லாவற்றினுமுள்ளதும் பிரஹ்ம (வியாபக) மும் முற்றிவுடையதுமான (பிம்ப வடிவ) பரமேசுவரனை (தத்துவமஸியாதி வாக்கியத்தினால்) அறிந்து (பிரதிபிம்பவடிவ) யான் பிரஹ்மமென்று நிச்சயிக்க அங்குப் பிரமாணம் யாது? (க)

(அ-கை) இவ்வாறு கேட்கப்பட்டவராகிய பக வான்பால் ஜல முதலிய அநேக திருஷ்டாந்தங்களால் உபாதியின் நீக்கத்தில் ஐக்கியம் சம்பவிக்கிறதென் று கூறுகின்றார்:—

श्रीभगवानुवाच,

यथा जलं जले क्षिप्तं क्षीरे घृते घृतं ।
अविशेषो भवेत्तद्वज्जीवात्मपरमात्मनो ॥ २ ॥

ஸ்ரீ பகவான்:—

எப்படி ஜலத்தில் ஜலத்தையும் பாலிற்பாலையும் நெய்யில் நெய்யையும் ஊற்றினால் அவிசேஷமா (பே தமில்லாததா) கின்றதோ, அதுபோல ஜீவாத்மபர மாத்மாக்களுக்கு அபேதமுண்டாகின்றது. அவித் தை முதலிய (உபாதிபேதத்தால் பேதமிருக்கினும் அவ்வுபாதி நீக்கத்தில் அபேத முண்டாகிறதென் பது கருத்து) (௨)

(அ-கை) இவ்வாற்றால் ஐக்கியஞானம் குருமுக மாகவே அடையப்பட்டதாயின் அவித்தையை நிவி ருத்திக்கும்; சுவதந்திரவிசாரத்தால் அடையப்பட்ட தாயின் நிவிருத்தி செய்யாது என்று கூறித் தத்துவ

ஞானத்தின் பொருட்டு, அவன் குருவையே அடைய வேண்டுமென்பதனால் குருவையுபாசித்துப் ஜீவனிடத்து விரைவில் தாதாத்மியத்தைக் கூறுகின்றார்:—

जीवे परेण तादात्म्यं सर्वगं ज्योतिरीश्वरं ।
प्रमाणलक्षणैर्ज्ञेयं स्वयमेकाग्रवेदिना ॥ ३ ॥

ஜீவனிடத்துப் பிரஹ்மத்தோடு தாதாத்மியமானதும் எல்லாவற்றின்கணுமுள்ளதும் ஜோதியுமானை ஈசுவரன், ஏகாக்கிர வுணர்ச்சியுள்ளவராகிய பிரஹ்மநிஷ்டகுருவினால் உபதேசிக்கப்பட்ட பிரமாண லக்ஷணங்களால் அறியத்தக்கதாம். (௩)

(அ-கை) இவ்வாறு குருவுபதேசத்திற்குப்பின் உண்டாகிய ஞானத்தினாலேயே பொருந்துவதாயிருக்கக் கர்மயோகத்தினாலுண்டாவதென்னை? என்று அர்ச்சுனன் கேட்கின்றான்:—

अर्जुन उवाच,

ज्ञानेनैव भवेद् ज्ञेयं विदित्वा तत्क्षणेन तु ।
ज्ञानमात्रेण मुच्येत किं पुनर्योगधारणा ॥ ४ ॥

அர்ச்சுனன்:—

பகவானே! ஞானத்தினாலேயே வஸ்துஜ்ஞேயமா (அறியத்தக்கதா) கின்றது. அறிந்து அந்தக்ஷணத்திலேயே ஞானமாத்திரத்தினால் முக்தனாகின்றானெனின், மீண்டும் யோகதாரணை (கர்மயோகாப்பியாசம்) ஏன்?

(அ-கை) இவ்வாறு கர்மயோகம் வியர்த்தமாதலைச்சங்கித்துத் தத்துவஞான முண்டாகுமளவும் அந்தக்கரணசுத்தியின்பொருட்டு அது அநுஷ்டிக்கத்தக்கதாம்; கர்ம சித்தியும் ஞானமு முண்டாகிய பின் கர்மாநுஷ்டானம் வேண்டியதில்லையென்று பகவான் கூறுகின்றார்:—

श्रीभगवानुवाच,

ज्ञानेन दीपिते देहे बुद्धिर्ब्रह्मसमन्विता ।
ब्रह्मज्ञानिना बिद्वाग्निर्देहेत्कर्मबन्धनम् ॥ ५ ॥

ஸ்ரீபகவான்:—

ஞானத்தினால் விளக்கப்பட்ட (சுத்தமாகிய) தேக (லிங்கசரீர)த்திலுள்ளபுத்தி பிரஹ்மத்தோடு

கூடியதாகின்றது. பிரஹ்மஞானாக்கினியினால் வித்வான் கர்மபந்தத்தைத் தகிக்கின்றான்.

அது "ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुतेऽर्जुन - அர்ச்சுனா ! ஞானாக்கினி சர்வகாமங்களையும் நாசஞ்செய்கின்றது." என்று பகவற்கீதையிற் சொல்லப்பட்டிருக்கிறது. (ரு)

(அ-கை) இவ்வாறு தத்துவ ஐக்கியமுணர்ந்தவனுக்கு அதன்பின் செய்யத்தக்க தொன்றுமில்லையெனக் கூறுகின்றார்:—

ततः पवित्रं परमेश्वराख्य मद्वैतरूपं विमलाम्बराभम् ।
यथोदके तोयमनुप्रविष्टं तथात्मरूपो निरुपाधिसंस्थितः ॥ ६॥

அதன் (தத்துவஞானத்தின்) பின் பெருநீரில் ஐக்கியமடைந்த கண்டமான நீரைப்போல் சுத்தமாகிய பரமேசுவரனென்னும் பெயருடையதாயினும் நிர்மலாகாசம்போன்ற(சங்கமில்லாத)தும் அத்வைதவடிவமு (சஜாதியவிஜாதீயாதிபேதமின்மையது) மான பிரஹ்மத்தில் ஆத்மரூபமானது உபாதியின்றி அபேதமாய் நிலைத்திருக்கின்றது. (சு)

(அ-கை) இவ்வாறு கூறியவண்ணம் கர்மாநுஷ்டான வாயிலாக உண்டாவதே தத்துவஞானமாம். அதற்குமுன் பரமாத்மதத்துவம் அறியக்கூடியதன்றெனக் கூறுகின்றார்:—

आकाशवत्सूक्ष्मशरीर आत्मा
न दृश्यते वायुवदन्तरात्मा ।

ஆத்மா ஆகாயத்தைப்போலச் சூக்ஷ்மவடிவினதாம் (அதீந்திரியமாம்) அந்தராத்மாவாய் வாயுவைப் போலக் காணப்படுகிறதில்லை.

(அ-கை) அங்ஙனமாயின் அபரோக்ஷ தத்துவஞானம் உண்டாகாதெனக் கூறுகின்றார்:—

सबाह्यमभ्यन्तरनिश्चलात्मा
ज्ञानोल्कया पश्यति चान्तरात्मा ॥ ७ ॥

அது உள்ளும் வெளியும் நிச்சலவடிவமாம். அந்தராத்மாவாய் (அந்தர்முகசித்தனாய்) ஞான மென்னும் கொள்ளிக்கட்டையால் அதாவது சுஞாந்துவடிவ ஒளியினால், தத்துவங்களின் ஐக்கியத்தைப் பார்க்கின்றான். (எ)

(அ-கை) இங்குச் சிலநூல் அர்ச்சிராதிமார்க்கத்தால் வேறுலோகத்தையடைய முக்தியுண்டாகின்றதென்பதனை மறுக்க 'இங்குப் பிரஹ்மத்தையடைகின்றான்' என்றல் முதலிய சுருதியினால் முற்கூறிய ஞானிகளின் முக்திசொரூபத்தைக் கூறுகின்றார்:—

यत्र यत्र मृतो ज्ञानि येन वा केन मृत्युना ।
यथा सर्वगतं व्योम तत्र तत्र लयं गतः ॥ ८ ॥

எல்லாவற்றினுமுள்ள (எல்லாவஸ்துக்களாலும் அவச்சின்ன) ஆகாயமும் அவச்சேதகவஸ்து நாசமாகுங்கால் ஆங்காங்கே மகாகாயத்தில் லயமடைகிறதுபோல எல்லாவற்றின் கண்ணுமுள்ளவனாகிய ஞானி (எங்கும் பரிபூரணமான பிரஹ்மத்திற்கு அபிந்நனாய்ச் சரீரமுதலிய உபாதிகளால் பிந்நமாக விபவகரிக்கப்படுகின்ற பரஹ்மாபரோக்ஷ ஞானி) எவ்விதமான மரணத்தினாலாவது எந்தெந்த இடத்தில் தேகத்தை விடுகின்றானோ அந்தந்த இடத்திலேயே பிரஹ்மத்தில் ஐக்கியத்தை யடைகின்றான். இதனால் தத்துவஞானிக்குத் தேகம் வீழ்தலில் தேச

காலாதி யபேக்ஷையில்லை யென்பது சூசிக்கப்பட்டது. (அ)

(அ-கை) ஜீவன் ஒன்றாயினும் தேகமுதலிய அவச்சேதகபேதத்தால் நாநாத்துவமானது ஜீவனுக்கு அணுத்தன்மையைச் சொல்லுவதானபக்ஷத்தில் சம்பவியாதென்று ஆசங்கித்து ஜீவனுக்கு வியாபகத்தன்மையைச் சாதிக்கின்றார்:—

शरीरव्यापितं व्योम भुवनानि चतुर्दश ।
निश्चलो निर्मलो देहि सर्वव्यापी निरञ्जनः ॥ ९ ॥

சரீரத்தில் வியாபித்துள்ள ஆகாயம் பதினான்கு புவனங்களையும் வியாபித்திருப்பதுபோல நிச்சலமும் (கிரியையின்றியதும்) நிர்மலமும் (பரிசுத்தமும்) நிரஞ்சனமு (சுயம்பிரகாசமு)மான தேகிஜீவன் சர்வவியாபி (ஜகத்துமுழுவதும் வியாபித்துள்ளவன்) ஆகின்றான். ஜகத்துமுழுவதும் அவித்தையின் பரிணாமமாயிருத்தலாலும், ஜகத்துபாதான அவித்தையின் பிரதிபிம்பம் ஜீவனாயிருத்தலாலும் ஜீவனுக்கு வியாபகத்தன்மையேயுளது; அணுத்துவமில்லையென்பது கருத்து.

(அ-கை) இவ்வாறு தத்துவஞானியின் முக்தி சொரூபத்தைக்கூறி இனி தத்துவஞான சாதனுநுஷ்டானம் செய்பவனுக்கு அதுவே சகலப் பிராயச்சித்தமுமாமெனக் கூறுகின்றார்:—

॥ योगप्रकारणप्रारम्भः ॥

मुहूर्तमपि यो यच्छेनासाग्रे मनसासह ।
सर्वं तरति पाप्मानं तस्य जन्मशतार्जितम् ॥ १० ॥

எவன் ஒரு முகூர்த்தமாயினும் நாசிநுனியில் மனதோடு செல்லுகின்றானே (தத்துவ ஞானத்தின் பொருட்டு நிச்சலமாகிய பார்வை வைக்கின்றானே) அவன் (அத்தன்மைய அம்சமுத்திரையில் நிலைப்பவன்) நூறு ஜன்மங்களில் ஆர்ஜிக்கப்பட்ட சகல பாபங்களையும் கடக்கின்றான்.

அது, "यद्ब्रह्मविचारणेक्षणमपि प्राप्तं मनस्थैर्यतां ॥ कुलं पवित्र जननी कृतार्थी विश्वंभरा पुण्यवतां च तेन
பிரஹ்ம விசாரத்தில் க்ஷணநேரமாயினும் மனதின் ஸ்திரத்தன்மை அடையப்படுமாயின் அதனால் அவன் குலம் பவித்திரமாம் அவனைப்பெற்றவள் கிருதார்த்த

மடைவான். பிறந்த பூமியும் புண்ணியமுடையதாம்." என்றல் முதலியவற்றுல் சொல்லப்பட்டிருக்கின்றது. (கO)

(அ-கை) முக்தி இருவகையாம்:—

(க) சத்யோமுக்தி, (உ) கிரமமுக்தி. அவற்றுள் சத்யோமுக்தியானது **यत्र यत्र मृतो** என்றல் (உ-வது அ-வது சுலோக)முதலியவற்றுனும் "**अत्र ब्रह्मसमश्नुते,** இங்குப் பிரஹ்மத்தை அடைகின்றுன்" என்னும் சுருதியினுலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

"**ब्रह्मणासह ते सर्वे संप्राप्ते प्रतिसंक्षये । अजस्यांते कृतात्मनः प्रविशन्ति परं पदं** பிரஹ்மாவின் முடிவில் பிரளய முண்டாகும்போது ஆத்மநிஷ்டர்களான அவ்வெல்லோரும் பிரஹ்மாவோடு கூடவே பரம்பதத்தை யடைகின்றுர்கள்" என்றல் முதலிய சுருதிகளாற் சொல்லப்பட்டிருக்கிறது. இங்வாறு சொல்லப்பட்டுள்ள கிரமமுக்தியை நிரூபித்தற்கு அர்ச்சிராதி மார்க்கத்திற் சென்றவர்களுக்குப் புநராவிருத்தி (மீண்டுந் திரும்புதல்) இல்லாமையையும், தூமாதி மார்க்கத்திற் சென்றவர்கட்குப் புநராவிருத்தியையும் நிரூபித்தற்கு யோசதாரணையால் அவ்விரண்டு மார்க்

கத்தின் சொரூபத்தையும் கூறுவாராய் முன்னர் அர்ச்சிராதிமார்க்கத்தைக் கூறுகின்றார் :—

**दक्षिणे पिङ्गला नाडी वह्निमण्डलगोचरा ।**
**देवयानमिति ज्ञेया पुण्यकर्मानुसारिणी ॥ ११ ॥**

வன்னிமண்டலத்தைக் கோசரிப்பதும் புண்ணிய கர்மாநுசாரியு(புண்ணிய கர்மங்களாலடையத்தக்கது) மாய்த் தேகத்தின் வலதுபாகத்தி (மூலாதார முதல் சகஸ்ராரம் வரையி) லுள்ள பிங்கலையென்னும் நாடி தேவயானம் (மீண்டும் திரும்புதலின்றிய அர்ச்சிராதி மார்க்கம்) என்றறியத் தக்கது. (கக)

(அ.கை) தூமமார்க்கத்தின் சொரூபத்தைக் கூறுகின்றார் :—

**इडा च वामनिःश्वासा सोममण्डलगोचरा ।**
**पितृयानमिति ज्ञेयं वाममाश्रित्य तिष्ठति ॥ १२ ॥**

இடது நிசுவாசத்தை யுடையதும் சோம மண்டலத்தைக் கோசரிப்பதுமான இடையென்னும் நாடி பிதுர்யான (மீண்டும் திரும்புதற்கநுகூலமான தூம மார்க்க) மென்றறியத் தக்கது. அது வாமத்தை

யாசிரயித்து (மூலதார முதல் சகஸ்ராரம் வரையிற் பொருந்தி) நிற்கிறது. (கஉ)

(அ-கை) இவ்வாறு இடை பிங்கலை நாடிகளின் ஸ்தானத்தையும் சொரூபத்தையும் சொல்லி சுழுமுனை நாடியின் சொரூபத்தை நிரூபிக்க அதன் சம்பந்தியாகிய பிரஹ்ம தண்டத்தின் சொரூபத்தைக் கூறுகின்றார் :—

गुदस्य पृष्ठभागेऽस्मिन् वीणादण्डस्य देहभृत् ।
दीर्घास्थिमूर्ध्नपर्यंतं ब्रह्मदण्डीति कथ्यते ॥ १३ ॥

இத்தேகத்தில் குதத்தின் பின்பாகத்தில் சிரசு பரியந்தம் வீணைதண்டம்போலத் தேகத்தைத் தாங்குவதாகிய நீண்ட எலும்பானது (பிரஹ்மைக்கியத்தினை விளக்கும் சுழுமுனை நாடிக்காதாரமாயிருத்தலால்) பிரஹ்மதண்டமென்று சொல்லப்படுகின்றது. (கந)

(அ-கை) இனி சுழுமுனை நாடியின் சொரூபத்தைக் கூறுகின்றார் :—

तस्यान्ते सुषिरं सूक्ष्मं ब्रह्मनाडीति सूरिभिः ॥ ५४ ॥

அதனு(பிரஹ்மதண்டத்தினு)ள்ளிருக்கும் ஸூக்ஷ்மமான துவாரம் பிரஹ்மநாடியென்று விவேகிகளாற் சொல்லப்படுகின்றது. (கச)

(அ-கை) அந்நாடியினையே நிரூபிக்கின்றார் :—

**इडापिंगलयोर्मध्ये सुषुम्ना सूक्ष्मरूपिणी ।**
**सर्वं प्रतिष्ठितं यस्मिन् सर्वगं सर्वतोमुखम् ॥ १५ ॥**

இடை பிங்கலைகளின் மத்தியில் ஸூக்ஷ்மவடிவமான சுழுமுனை யிருக்கின்றது. அதில் எல்லாமும் எல்லாவற்றின்கணுள்ளதும் எங்கு முகமுள்ளதுமான வஸ்து பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கிறது. (கரு)

(அ-கை) சுழுமுனைவழியிற் சென்றவனுக்குப் பிரஹ்மப் பிராப்தியை நிரூபித்தற்கு அக்குண்டலியின் சகல ஜகத்வடிவத் தன்மையையும் சகல ஜகத்திற்கும் ஆதாரமாதலையும் சகல தேவவடிவத்தன்மையையும் சகல தேவர்களுக்கும் ஆதாரமுடைமையையும் கூறுகின்றார் :—

**तस्य मध्यगतास्सूर्य सोमाग्निपरमेश्वराः ।**
**भूतलोका दिशः क्षेत्रं समुद्राः सर्वताश्शिलाः ॥ १६ ॥**

அதன் மத்தியில் சூரியன் சந்திரன் அக்கினி பரமேசுவரனென்னும் தேவதைகளும், பஞ்சபூதங்களும், பதினான்கு லோகங்களும், பத்துத் திக்குகளும், வாராணசியாதி க்ஷேத்திரங்களும், லவணாதி சமுத்திரங்களும், மகாமேருவாதி பர்வதங்களும், யஞ்ஞசிலை சித்திரசிலை முதலிய சிலைகளும்,

**द्वीपाश्च निम्नगा वेदाः शास्त्रविद्याकलाक्षराः ।**
**स्वरमंत्रपुराणानि गुणाश्चैते च सर्वशः ॥ १७ ॥**

ஜம்புவாதி தீபங்களும், கங்கை முதலிய ஆறுகளும், இருக்கு முதலிய வேதங்களும், மீமாம்ஸை முதலிய சாஸ்திரங்களும், ௧௪ வித்தைகளும் ௬௪ கலைஞானங்களும், ககார முதலிய ௩௪ எழுத்துக்களும் அகார முதலிய பதினாறு உயிர்களும், காயத்திரியாதி மந்திரங்களும். பிரஹ்ம முதலிய பதினெண் புராணங்களும், சத்துவாதி குணங்களும்,

**बीजं बीजात्मकस्तेषां क्षेत्रज्ञाप्राणवायवः ।**
**सुषुम्नान्तर्गतं विश्वं तस्मिन्सर्वं प्रतिष्ठितत् ॥ १८ ॥**

பீஜ (பிரதான)மும், பீஜசொரூபமாயுள்ள மகதாதிகளும், க்ஷேத்திரஞ்ஞ (ஜீவ)ர்களும், பிராணாதி

வாயுக்களும் யாவும் இருக்கின்றன. ஆதலால் அச் சுழுமுனை நாடியில் சகல ஜகத்தும் நிலைத்திருக்கின்றன. "तस्यांते सुषिरं सूक्ष्मं तस्मिन्सर्वं प्रतिष्ठितम् — அதனுள் துவாரம் சூக்ஷ்மமாயிருக்கின்றது. அதில் சகலமும் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கின்றன" என்னும் சுருதியினால். (கஅ)

(அ-கை) அது சகல ஜகத்தின் உற்பத்திக்கும் காரணமாதலைக் கூறுகின்றார்.

नाना नाडिप्रसवगं सर्वभूतान्तरात्मनि ।
ऊर्ध्वमूलमधश्शाखं वायुमार्गेण सर्वगम् ॥ १९ ॥

பலவிதமான நாடிகளுக்கு உற்பத்திஸ்தானமாயும், சர்வ பூதங்களின் அந்தராத்மாவினிடத்திலுள்ள மேல் (பிரஹ்மமாகிய) வேரும் (ஹிரணியகர்ப்ப முதலிய சிருஷ்டி பரம்பரையாகிய) கீழ்க்கிளைகளுமுள்ளதாயும், வாயுமார்க்கத்தால் எல்லாவற்றிலு மிருப்பதாயு மிருந்து கொண்டு ஜகத்திற்கு உபதானமாக நிற்கின்றது. (கக)

(அ-கை) பிரஹ்மோபாசனைக்கு இடமாயிருத்தலால் மற்றைய நாடிகளினும் இஃததிகமாதலைக் கூறுகின்றார்:—

द्विसप्ततिसहस्राणि नाड्यस्स्युर्वायुगोचराः ।
सर्वमार्गेण सुषिरास्तिर्यञ्चसुषिरात्मिकाः ॥ २० ॥

வாயுகோசர (வாயுசஞ்சாரத்திற்கு அனுகூல) நாடிகள் எழுபத்திராயிரமாம். சர்வமார்க்கத்தாலும் (மீண்டுவருதலை யடைவிப்பனவாகிய) குறுக்கான துவார வடிவ நாடிகளிருக்கின்றன. (உ0)

अधश्चोर्ध्वगतास्तासु नवद्वाराणि रोधयन् ।
वायुनासह जीवोर्ध्वज्ञानि मोक्षमवाप्नुयात् ॥ २१ ॥

கீழும் மேலும் செல்வனவாகிய அவற்றுள் சுழுமுனை நாடியால் ஒன்பது துவாரங்களையும் தடுத்துச் சுழுமுனையினுள்ளிருக்கும் வாயுவோடு ஜீவனை மேற்செலுத்திப் பிரஹ்மத்தை யறிபவன் மோக்ஷத்தை யடைகின்றான். "**तयोर्ध्वमायन्नमृतत्वमेति** அதன்மேற் சென்று அமுதத்தன்மையை யடைகின்றான்" என்னும் சுருதியால். (உக)

(அ-கை) சகல ஜகத்திற்கும் ஆதாரத்தன்மையாகவும் சகல ஜகத்து வடிவத்தன்மையாகவும் யோகோபாசனையைச் செய்வதற்கு இதன் கண்ணேயே சகல இந்திராதி புரங்களையும் கற்பிக்கின்றார் :—

अमरावतीन्द्रलोकेस्मिन्नासाग्रे पूर्वतो दिशि ।
अग्निलोको ह्यथ ज्ञेयश्चक्षुस्तेजोवती पुरी ॥ २२ ॥

இந்தச் சுழுமுனைநாடியின் கீழ்த்திசையில் நாசியின் நுனிப்பாகத்தில் அமராவதி யென்னும் இந்திர பட்டணமும், பின்னர் வலதுகண்ணில் அக்கினியின் லோகமாகிய தேஜோவதியென்னும் பட்டணமு முள. (உஉ)

(அ-கை) இதுவுமது :—

याम्यां संयमी श्रोत्रे यमलोकः प्रतिष्ठितः ।
नैर्ऋतो ह्यथ तत्पार्श्वे नैर्ऋतो लोक आश्रितः ॥ २३ ॥

வலதுகாதில் யமலோகமாகிய சம்யமனி யென்னும் பட்டணமிருக்கிறது. அதன் பக்கத்தில் நிருதியின் பட்டணமாகிய நைருத மிருக்கிறது. (உ௩)

(அ-கை) இதுவுமது :—

विभावती प्रतीच्या तत्पृष्ठे वारुणिका पुरी ।
वायोर्गंधवती कर्णपार्श्वे लोकः प्रतिष्ठितः ॥ २४ ॥

மேற்குத் திசையாகிய பின்புறத்தில் விபாவதி யென்னும் வருணனுடைய பட்டணமிருக்கின்றது.

இடது காதின் பக்கத்தில் கந்தவதியென்னும் வாயுவின் பட்டணமிருக்கிறது. (௨௪)

(அ-கை) இதுவுமது :—

सौम्या पुष्पवती सौम्ये सोमलोकस्तु कंठतः ।
वामकर्णंतु विज्ञेयो देहमाश्रित्य तिष्ठति ॥ २५ ॥

வடதிசையில் கழுத்திலின்றும் இடது காதுபரியந்தம் தேகத்தை ஆசிரயித்து புஷ்பவதியென்னும் சோமலோகமாகிய குபேரபட்டண மிருக்கிறது. (௨௫)

(அ-கை) இதுவுமது :—

वामे चक्षुषि चेशानी शिवलोकं मनोन्मनी ।
मूर्ध्नि ब्रह्मपुरी ज्ञेया ब्रह्माण्डं देहमाश्रितम् ॥ २६ ॥

இடதுகண்ணில் ஈசானசம்பந்தியாகிய மனோன்மணி யென்னும் சிவலோகமிருக்கின்றது. சிரசில் பிரஹ்மபுரியென்னும் பிரஹ்மலோகமிருக்கிறது. இவ்வாறு பிரஹ்மாண்டம் தேகத்தை ஆசிரயித்திருக்கின்றது. (௨௬)

(அ-கை) இதுவுமது:—

**पादादधः शिवोनंतः कालाग्निः प्रलयात्मकः ।**
**अनामयमधश्चोर्ध्वं मध्यमं तु बहिश्शिवः ॥ २७ ॥**

பாதத்தின் கீழ் அநந்த (மகாசேஷரும் "**त्रिलोक्यां दह्यमानायां संकर्षणमुखाग्निना ।** சங்கர்ஷணர் முகாக்கினியால் மூன்றுலோகமும் எரிக்கப்படுங்கால்" என்னும் ஸ்மிருதியால், காலாக்கினி ரூபமாகிய சிவனிருக்கின்றார். மேல் கீழ் நடு உள் வெளி எங்கும் அநாமயமும் மங்கலவடிவுமாகிய பிரஹ்மமே யிருக்கின்றது. (உஎ)

(அ-கை) தேகத்திலேயே லோகமுதலியவற்றின் கற்பனையைக் கூறுகின்றார்:—

**अधःपदोतलं विद्यात् पादं तु वितलं विदुः ।**
**नितलं पादसंधिं च सुतलं जंघमुच्यते ॥ २८ ॥**

பாதத்தின் கீழ் அதலமென்றறி. பாதத்தை விதலமென்றறி. பாதத்தின் சந்தியை நிதலமென்றும் கணைக்காலைச் சுதலமென்றும் கூறுவர். (உஅ)

(அ-கை) இதுவுமது :—

**महातलन्तु जानुस्स्यादुरुदेशो रसातलं ।**

**कटिस्तलातलं प्रोक्तं सप्तपातालसंज्ञया ॥ २९ ॥**

முழந்தாளை மகாதலமென்றும் தொடையை இரஸாதலமென்றும் இடையைத் தலாதலமென்றும் ஏழு பாதாளங்களாகச் சொல்லுவர். (உ௯)

(அ-கை) இதுவுமது :—

**कालाग्निनरकं घोरं महापाताल संज्ञया ।**

**पातालं नाभ्यधोभागः भोगीन्द्रफणिमण्डलम् ॥**

**वेष्टितस्सर्वतोऽनन्तः सबिभ्रज्जीव संज्ञकः ॥ ३० ॥**

காலாக்கினியைப்போன்ற கோரமான நரகமும் போகீந்திரனாகிய ஆதிசேஷனுக்கும் மற்றைப் பாம்புகளுக்கும்இடமாகியபாதாளம் நாபியின் கீழ்பாகத்தில் மகாபாதாளமென்னும் பெயரால் சொல்லப்படும். ஜீவனென்னும் பெயரையுடைய அநந்தன் குண்டலவடிவமாகச் சரீர முழுவதனையும் சுற்றிக்கொண்டிருக்கின்றான். (௩௰)

(அ-கை) இதுவுமது :—

भूर्लोको नाभिदेशं तु भुवर्लोकं तु कुक्षितः ।
हृदयं स्वर्गलोकं तु सूर्यादिग्रहतारकाः ॥ ३१ ॥

நாபிதேசத்தில் பூலோகமும் வயிற்றில் புவர்லோகமும் இருதயத்தில் சுவர்க்கலோகமும் சூரியன் முதலிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் இருக்கின்றன. (௩௧)

(அ-கை) இதுவுமது :—

सूर्यसोमसनक्षत्रं बुधशुक्रकुजांगिराः ।
मन्दश्च सप्तमो ज्ञेयः ध्रुवोऽपि स्वर्गलोकतः ॥ ३२ ॥

சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் குரு வெள்ளி சனி என்னும் ஏழு கிரஹங்களின் லோகங்களையும் சுவர்க்கலோகத்தினுள் துருவலோகத்தையும், (௩௨)

(அ-கை) இதுவுமது :—

हृदये च महर्लोकं जनलोकं तु कण्ठतः ।
तपोलोकं भ्रुवोर्मध्ये मूर्ध्नि सत्यं प्रतिष्ठितम् ॥ ३३ ॥
हृदये कल्पयन् योगी तस्मिन्सर्वसुखं लभेत् ।

இதனுடைய இருதயத்தில் மகர்லோகமும் கண்டத்தில் ஜனலோகமும் புருவ நடுவில் தபோலோகமும் சிரசில் சத்தியலோகமு மிருக்கின்றன வென்று இருதயத்தில் யோகி கற்பிக்கிறான். அதில் சகல சுகத்தையும் அடைகிறான். (௩௩)

(அ-கை) இவ்வாறு தேகத்திலேயே சர்வலோக கற்பனையையும் கூறி அவற்றின் லயக்கிரமத்தையும் கூறுகின்றார் :—

**ब्रह्माण्डरूपिणी पृथ्वी तोयमध्ये विलीयते ।**
**अग्निना पच्यते तोयं वायुना ग्रस्यतेऽनलः ॥ ३४ ॥**

பிரஹ்மாண்ட வடிவமான பிருதிவி ஜலமத்தியில் ஒடுங்குகிறது. ஜலம் அக்கினியினால் பாகமாகின்றது அக்கினி வாயுவினால் விழுங்கப்படுகிறது.

**आकाशस्तु पिबेद्वायुं मन आकाशमेव च ।**
**बुद्ध्यहंकारचित्तं च क्षेत्रज्ञे परमात्मनि ॥ ३५ ॥**

ஆகாசம் வாயுவைப் பருகுகின்றது. ஆகாயத்தை மனம் விழுங்குகின்றது. மனது புத்தி அகங்காரம் சித்தம் என்பவை க்ஷேத்திரஞ்ஞனாகிய பரமாத்மாவினிடத்தில் லயமாகின்றன. (௩௫)

(அ-கை) இத்தன்மைய யோகாப்பியாசத்தினல் பிரஹ்ம ஐக்கியாநுசந்தானமுள்ளவனுக்குச் சகல பாபங்களும் நீங்குமெனக் கூறுகின்றார்:—

अहं ब्रह्मेति मां ध्यायेदेकाग्रमनसासकृत् ।
सर्वं तरति पाप्मानं कल्पकोटिशतैः कृतम् ॥ ३६ ॥

இவ்வாறு ஒடுக்கி நான் பிரஹ்மமென்று என்னை ஏகாக்கிரமனதால் எவன் ஒருமுறை தியானிக்கிறானே, அவன் நூறுகோடி கற்பங்களில் செய்த சகல பாபங்களையும் கடக்கிறான். (௩௬)

(அ-கை) ஜீவனுடைய முக்தி ஸ்வரூபத்தைக் கூறுகின்றார்:—

घटसंवृतमाकाशं लीयमाने यथा घटे ।
लीयते च महाकाशे तद्वज्जीवः परात्मनि ॥ ३७ ॥

கடாவச்சின்ன ஆகாயம் எப்படிக் கடம் நஷ்டமானல் மகாகாசத்தில் ஒடுங்குகிறதோ அப்படியே ஜீவன் பரமாத்மாவில் லயமாகின்றான். (௩௭)

(அ-கை) இதுவுமது:—

घटाकाशमिवात्मानं विलयं वेत्ति तत्त्वतः ।
स गच्छति निरालंबं ज्ञानालोकं न संशयः ॥ ३८ ॥

கடாகாசத்தைப்போல எவன் யதார்த்தமாகப் பரமாத்மாவில் ஜீவாத்மாவின் விலயத்தை யறிகின்றனோ அவன் ஞானவடிவப் பிரகாசமும் நிராலம்பமுமான பதத்தை யடைகிறான். இதிற் சமசயமில்லை. (௩அ)

(அ-கை) இவ்வாற்றால் இந்த ஞானயோகத்திற்கு ஏதுவும் சமமாகாதென்று கூறுகின்றார்:—

**तपेद्वर्षसहस्राणि एकपादस्थितो नरः ।**
**एकस्य ध्यानयोगस्य कलां नार्हन्ति षोडशीम् ॥ ३९ ॥**

நரன் ஒரு காலில் நின்றுகொண்டு அநேகமாயிர வருஷங்கள் தவஞ்செய்யினும் அது தியானயோகமொன்றன் பதினாறில் ஒரு அம்சத்திற்கு இணையாகாது. (௩௯)

(அ-கை) இந்த ஞானயோகம் சர்வபாபங்களையும் நாசஞ் செய்யுமெனக் கூறுகின்றார்:—

**ब्रह्महत्यासहस्राणि भ्रूणहत्याशतानि च ।**
**एको हि ध्यानयोगश्च दहत्यग्निरिवेन्धनम् ॥ ४० ॥**

பிரஹ்மஹத்தி ஆயிரங்களாயினும் புருணா (சிசு) ஹத்தி நூறுகளாயினும் அவற்றை விறகினைத் தீ எரிப்பது போல ஒரு தியானயோகமே தகித்து விடுகிறது. (௪௦)

(அ-கை) பிரஹ்மாத்மைக்கிய ஞானத்திற்கு ஏதுவாகாத சாஸ்திரவுணர்ச்சி பயனற்றதாமென்று கூறுகின்றார்:—

अधीत्य चतुरो वेधान्धर्मशास्त्राणि मानवः ।
यो वै ब्रह्म न जानाति दर्वी पाकरसं यथा ॥ ४१ ॥

நான்குவேதங்களையும் தர்மசாஸ்திரங்களையும் எப்போதும் விசாரித்து எவன் நான் பிரஹ்மமென்று அறியவில்லையோ, அவன் பாகரசத்தையறியாத அகப்பையைப் போன்றவனாவன்.

(அ-கை) பிரஹ்மாத்மைக்கிய சாரத்தை யுணராதபோது சாஸ்திரப்பயிற்சி துக்ககாரணமேயாமென்பதனை கழுதை திருஷ்டாந்தத்தாற் கூறுகின்றார்:—

यथा खरश्चन्दनभारवाही भारस्य वेत्ता न तु चन्दनस्य ।
तथैव शास्त्राणि बहून्यधीत्य सारं न जानन्खरवद्वहेत्सः ।४२।

சந்தனத்தைச் சுமக்கும் கழுதை பாரத்தை யறிகிறது; சந்தனத்தை யறிகிறதில்லை. அதுபோலவே வெகு சாஸ்திரங்களைப்படித்தும் சாரத்தை யறியாதவன் கழுதையைப்போலச் சுமக் (தூக்கிக்கிறான்)கின்றான். ()

(அ-கை) பிரஹ்மஞான பரியந்தம் யாவும் அநுஷ்டிக்கத் தக்கனவாம். ஞானத்தின் பின் யாவும் வியர்த்தமா மென்று கூறுகின்றார் :—

अनन्तकर्मशौचं च तपोयज्ञस्तथैव च ।
तीर्थयात्रानुगमनं यावत्तत्त्वं न विन्दति ॥ ४३ ॥

அநந்தகர்மமும் சௌசமும் ஜபமும் யாகமும் அப்படியே தீர்த்தயாத்திரை முதலியவற்றிற்குச் செல்லுதலு மாகிய யாவும் தத்துவத்தையடையும் வரையிற்றான். ()

(அ-கை) தேகம் பிரிக்கப்பட்டபோதும் ஆத்ம ஐக்கியத்தைத் திருஷ்டாந்தத்தினாற் கூறுகின்றார்:—

गवामनेकवर्णानां क्षीरं स्यादेकवर्णतः ।
क्षीरवद्भाति विज्ञानं देहिनां च गवां यथा ॥ ४४ ॥

பசுக்கள் அநேக வர்ணங்களாயிருக்கினும் பால் ஒரு வர்ணமாகவே யிருக்கும். பசுக்களிடத்துப் பாலைப் பார்ப்பது போலத் தேகிகள் வேறு வேறு யினும் ஞானமாகிய பிரஹ்மம் ஒன்றெனவிவேகி காண்கின்றான். (சச)

(அ-கை) அகங்கார நீக்கத்தைக் கூறுகின்றார் :—

अहं ब्रह्मेति नियतं मोक्षहेतुर्महात्मनाम् ॥ ४५ ॥

யான் பிரஹ்மமென்பது நியதமாய் மகாத்மாக் களுக்கு மோக்ஷ ஏதுவாம். (சரு)

द्वे पदे बन्धमोक्षाय न ममेति ममेति च ।
ममेति बध्यते जन्तुर्न ममेति विमुच्यते ॥ ४६ ॥

பந்தமோஹங்களின் பொருட்டு என்னுடைய தென்றும் என்னுடைய தன்றென்றும் இரண்டுபதங் களுண்டு. என்னுடையதென்று ஜீவன் கட்டுப்படு கின்றான். என்னுடைய தன்றென்று ஜீவன் விடுபடு கின்றான். (சசு)

मनसा ह्युन्मनीभावाद् द्वैतं नैवोपलभ्यते ।
यथा यात्युन्मनीभावं तदा तत्परमं पदम् ॥ ४७ ॥

மனதின் உன்மனித்தன்மையால் (மனது ஆத்மாவில் நிருவிகற்பத்தை யடையுங்காலத்து) துவைதம் காணப்படுகிறதில்லை எப்போது உன்மனித்தன்மையை (அகங்கார நீக்கத்தை) யடைகின்றதோ அப்போது அது பரம்பதமாகிய மோக்ஷமெனப் படுகின்றது. (சஎ)

(அ-கை) பிரஹ்மவிசாரம் செய்யாதவனுக்கு எல்லாம் வியர்த்தமெனக் கூறுகின்றார் :—

**हन्यान्मुष्टिभिराकाशं क्षुधार्तः खण्डयेत्तुषम् ।**
**नाहं ब्रह्मेति जानाति तस्य मुक्तिर्न जायते ॥ ४८ ॥**

எவன் வேதசாஸ்திரங்களை ஓதியும் கேட்டும் யான் பிரஹ்மமென்று அறியவில்லையோ அவனுக்குச் சகல சாஸ்திரங்களும் பிரயாசமாத்திர பயனுள்ளனவாம். அஃதெங்ஙன மெனின், பசியுள்ளவன் கைகால் ஆகாயத்தைக் குத்துவானாயின் கைவலியுண்டாதலே யன்றி வேறு பயனில்லை. அல்லது அப்பசியுள்ளவன் உமியைக் குத்துவானாயின் குத்துதற் பிரயாசையே யன்றி பயன் வேறில்லை. அதுபோல இவனுக்கும் முக்தி யுண்டாகிறதில்லை என்பது பொருள்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஸ்ரீ க்ருஷ்ணபரப்ரஹ்மணே நம:

# மூன்றாம் அத்தியாயம்.

(அ-கை) யோகி வீண்தொழில்களையும் வார்த்தைகளையும் விடுதலால் சாந்த புத்தியுடையவனாய் ஹரியினையே சரணமடைவனென்று மூன்றாவதிற் கூறுகின்றார்:—

**श्रीभगवानुवाच,**

**अनन्तशास्त्रं बहु वेदितव्यमल्पश्च कालो बहवश्च विघ्नाः**
**यत्सारभूतं तदुपासितव्यं हंसो यथा क्षीरमिवाम्बुमिश्रम् ।१।**

ஸ்ரீ பகவான்:—

அறியத்தக்க சாஸ்திரங்கள் அநேகமுள. அவற்றினும் அறியத்தக்க விஷயங்கள் அநேகமுள. அவற்றை யறிதற்குக்காலம் அற்பமாம். அதனிலும் விக்கினங்கள் வெகுவாம். ஆதலால் விவேகியாகிய யோகியினால் நீரிற் கலந்த பாலை அன்னம் பிரிப்பதுபோல் இவற்றினின்றும் சாரவடிவமானது எதுவோ அது பிரித்து உபாசிக்கத்தக்கதாம். (க)

(அ-கை) ஆதலால் பாண்டித்தியத்தை யறிந்து என்றல் முதலிய சுருதியினால் பாண்டித்திபப் பிரகடனத்திற்குப் பிரஹ்மோபாசனையைப் பிரதிபந்திக்குந் தன்மை யிருத்தலால் சகலபாண்டித்தியமும் தள்ளத்தக்கதா மென்று கூறுகின்றார் :—

**पुराणं भारतं वेदाः शास्त्राणि विविधानि च ।**
**पुत्रदारादिसंसारो योगाभ्यासस्य विघ्नकृत ॥ २ ॥**

புராணம் பாரதம் நாநாவிதமான வேதசாஸ்திரங்கள் புத்திரதார முதலிய சம்ஸாரம் என்பவை ஆத்ம ஐக்கியமான யோகாப்பியாசத்திற்கு விக்கினத்தைச் செய்வனவாம். (உ)

(அ-கை) அன்றியும் ஆத்மவிசாரமின்றிய பிறவிசாரிக்கத்தக்கனவாகா, முடிவில்லாதனவா யிருத்தலின் என்று கூறுகின்றார் :—

**इदं ज्ञानमिदं ज्ञेयं यस्सर्वं ज्ञातुमिच्छति ।**
**अपिवर्षसहस्राणि शास्त्रान्तं नाधिगच्छति ॥ ३ ॥**

இது ஞானம் இது ஞேயம் என்று எவன் எல்லாவற்றையும் அறிய இச்சிக்கிறானோ அவன் ஆயிரம்

வருஷம் ஆயுளுடையவனுயினும் சாஸ்திரத்தின் முடிவை யடையான். (௩)

(அ-கை) அப்படியானுல் செய்யத்தக்கது யாதெனக் கூறுகின்றார் :—

त्रिज्ञेयोऽक्षरतन्मात्रो जीवितं चापि चञ्चलम् ।
विहाय शास्त्रजालानि यत्सत्यं तदुपास्यताम् ॥ ४ ॥

நாசமின்றிய சத்தாமாத்திரமாகிய ஆத்மா அறியத்தக்கதாம். (அங்கு வைராக்கியத்தின் பொருட்டு) வாழ்வு சஞ்சலம் (நாசமுடையது) என்று அறியத்தக்கதாம். ஆதலால் சாஸ்திரக் கூட்டங்களைத் தள்ளி எது சத்தியமோ அதனையே உபாசிக்கவேண்டும். (௪)

(அ-கை) இந்திரியம் ஜயிக்கப்படின் வைராக்கியம் தானே உண்டாகுமெனக் கூறுகின்றார் :—

पृथिव्यां यानि भूतानि जिह्वोपस्थनिमित्तकम् ।
जिह्वोपस्थपरित्यागे पृथिव्या किं प्रयोजनम् ॥ ५ ॥

பிருதிவியின்கண் எவை உண்டாயிருக்கின்றனவோ அவை நாவின்பொருட்டும் உபஸ்தத்தின் பொருட்டு

மாம். நாவையும் உபஸ்தத்தையும் கைவிடின் பிருதிவி யினால் பிரயோஜனம் யாதுளது. ஒன்றுமில்லை யென்ற படி. (ரு)

(அ-கை) இவ்வாறு ஆத்மசமாதியில் நிலைத்தவனுக்கு எங்கும் பிரஹ்மதரிசனமேயன்றி வேறு தரிசனமில்லை யெனக் கூறுகின்றார் :—

तीर्थानि तोयरूपाणि देवान् पाषाणमृण्मयान् ।
योगिनो न प्रपद्यन्त आत्मध्यानपरायणाः ॥ ६ ॥

ஆத்மத்தியானபராயணர்களாகிய யோகிகள் ஜலவடிவமான தீர்த்தங்களையும் கல் மண் வடிவமான தெய்வங்களையும் அடைகிறதில்லை. (சா)

(அ-கை) யோகிகளுக்கு எங்கும் பிரஹ்மதரிசனமே யென்னு மிதனை அதிகாரிபேதத்தால் கூட்டுகின்றார் :—

अग्निर्देवो द्विजातीनां मुनीनां हृदि दैवतम् ।
प्रतिमा स्वल्पबुद्धीनां सर्वत्र समदर्शिनाम् ॥ ७ ॥

கர்மகாண்டத்திற் பொருந்தியவர்களாகிய துவிஜர்களுக்கு அக்னியே தெய்வம். முனி (மனனசீலராகிய யோகி) களுக்கு இருதயகமலத்திலுள்ள பரிச்சின்ன

மூர்த்தியே தெய்வம். சொற்ப புத்தியுடைய பிராகிருதர்களுக்கு மண் கல் முதலிய பிரதிமையே தெய்வம். சமதரிசனமுடைய ஞானிகளுக்கு இவை யாவும் நிச்சயமாகப் பிரஹ்மமே யென்னும் சுருதியினால் எங்கும் (எல்லாம்) தெய்வமாம். (௭)

(அ-கை) ஆதலால் ஞானத்தினாலேயே அறியத்தக்கதாம், ஞானமின்றியபோது பிரஹ்மம் அறியப்படுகிறதில்லை யெனத் திருஷ்டாந்தத்தோடு கூறுகின்றார் :—

सर्वत्रावस्थितं शान्तं न प्रपश्येज्जनार्दनम् ।
ज्ञानचक्षुर्विहीनत्वादन्धः सूर्य्यमिवोदितम् ॥ ८ ॥

எங்கும் நிலைத்துள்ள சாந்தமாகிய ஜநார்த்தனனை அஞ்ஞன் ஞானநேத்திர மின்மையால் அறிகிறதில்லை. அது சூரியனுதித்தும் குருடனறியாதது போலாம். (அ)

(அ-கை). "நிச்சயமாக இவ்வெல்லாம் பிரஹ்ம" மென்னும் இதனைச் சம்பாதிக்கின்றார் :—

यत्र यत्र मनो याति तत्र तत्र परं पदम् ।
तत्र तत्र परं ब्रह्म सर्वत्र समवस्थितम् ॥ ९ ॥

எங்கெங்கு மனது செல்லுகின்றதோ அங்கங்கு பரம (அடையத்தக்க மேலான) பதமாம். எங்கு நிறைந்துள்ள பரப்பிரஹ்மமே அங்கங்கு மூளது (கடம் விளங்குகின்றது என்றல் முதலிய விளக்கா பவ மிருத்தலால்.) (கூ

(அ-கை) இத்தன்மைய யோகிக்கு யாவும் பிரத்தி யக்ஷமாய் விளங்குகின்றன என்று கூறுகின்றார்:—

दृश्यन्ते दृशि रूपाणि गगनं भाति निर्मलम् ।
अहमित्यक्षरं ब्रह्म परमं विष्णुमव्ययम् ॥ १० ॥

பரமமும் (எல்லாவற்றின் மேலானதும் அக்ஷரமு (நாசமின்றியதும்) அவ்வியயமும் (குறைதலின்றி தும்) விஷ்ணுவு (வியாபகமு) மாகிய பரமாத்மாவை யான் என்று எவன் அபேதமாக அறிகின்றானோ அவனுக்கு ஞானத்தில் உருவங்கள் காணப்படுகின் றன. (நாமரூபங்களாகிய ஜகத்து காணப்படுகின்றது என்பது பொருள்.) ஆகாயமும் நிர்மலமாகத் தோன்று கின்றது (அப்படியே எல்லாவற்றையும் பிரத்தியக்ஷ மாய் அறிகின்றான் என்பது பொருள்.) (க

(அ·கை) உட்சென்றவர்களுக்கும் அணிமாதியோக த்தியை அபேக்ஷியாது பிரஹ்ம நிஷ்டையே உண் ாக வேண்டுமென்று கூறுகின்றார் :—

दृस्यते चेत्खगारं खगाकारं विचिन्तयेत् ।
सकलं निष्कलं सूक्ष्मं मोक्षद्वारेण निर्गतम् ॥ ११ ॥
अपवर्गस्य निर्वाण परमं विष्णुमव्ययम् ।
सर्वात्मज्योतिराकाशं सर्वभूताधिवासितम् ॥ १२ ॥

* ஹம்ஸ (பரப்பிரஹ்ம) வடிவம் காணப்படின், ளமும் தேஜோமயமும்) நிஷ்களமும் (கலாதீதமும்) க்ஷ்மமும் (வேறு பிரமாணங்களால் அறியப்படாத ம்) மோக்ஷத்துவார (மார்க்க) த்தால் அடையப் வதும் மோக்ஷ சுகவடிவினதும் மேலாகியதும் ாபகமானதும் அழிவற்றதும் சர்வ பூதங்களுக்கும் திஷ்டானமும் சுயம்பிரகாசமும் ஹம்ஸவடிவினது ிய பரப்பிரஹ்மத்தைப் பாவிக்கவேண்டும். கக-கஉ

ஈண்டு (ஹம்ஸம்) அம்சமென்றது பரப்பிரஹ்மம்; 'हंसो धः शंकरएव हंसो हंसश्च विष्णुर्गुरेव हंसः—பிரஹ்மா ஸம் விஷ்ணு ஹம்ஸம் சங்கரன் ஹம்ஸம் குருவே ஸம் என்றல் முதலிய சுருதியினல்.

(அ-கை) ஏகமாகிய வஸ்துவைப் பற்றுகின்றவனு
குக் கருமப்பற்றில்லையென்று கூறுகின்றார் :—

अहं ब्रह्मेति यः सर्वं विजानाति नरः सदा ।
हन्यात्स्वयमिमान्कामान्सर्वाशी सर्वविक्रयी ॥ १३ ॥

எப்போதும்யான் பிரஹ்மமென்று எவன் எல்லாவ
றையும் அறிகின்றானோ அவன் சகல நிஷித்தங்க
யும் புசிக்கின்றவனும் எல்லாநிஷித்த திரவியங்களை
விற்கின்றவனுமாயிருந்தும் இயல்பாகவே இவ்வெ
லாக் கர்மங்களையும் நாசஞ்செய்கின்றான். அதன
பாபமற்றவனாகின்றான். (க

(அ-கை) க்ஷணமாத்திரமாயினும் பிரஹ்மத் தி
னத்தில் இரமிப்பவனுக்கு வேறு சுகம் சிந்தி
வேண்டியதில்லை எனக் கூறுகின்றார் :—

निमिषं निमिषार्धं वा शीताशीतनिवारणम् ।
अचला केशवे भक्तिर्विभवैः किं प्रयोजनम् ॥ १४ ॥

சீத உஷ்ணங்களைச் சகித்தலோடு ஒரு நிமிஷமா
அரை நிமிஷமாவது கேசவனிடத்து அசைவின்

க்தி இருக்குமாயின் அந்த யோகிக்கு மற்ற விபவ (விஷய சுக)ங்களால் என்ன பிரயோஜனம்? (கச)

(அ-கை) இத்தன்மைய யோகி மோக்ஷத்தை அபேக்ஷிப்பானாயின் வேறு விஷயத்தைச் சிந்தியானென்று கூறுகின்றார் :—

भिक्षान्नं देहरक्षार्थं वस्त्रं शीतनिवारणम् ।
अश्मानं च हिरण्यं च शाकं शाल्योदनं तथा ॥ १५ ॥
समानं चिन्तयेद्योगी यदि चिन्तामपेक्षते ।
भूतवस्तुन्यशोचित्वे पुनर्जन्म न विद्यते ॥ १६ ॥

யோகி சிந்திக்கத்தக்க மோக்ஷத்தை அபேக்ஷிப்பாராயின் தேகரக்ஷணையின்பொருட்டு பிக்ஷாடனத்தைச் சிந்திக்கக்கடவன். (நாக்குருசியின்பொருட்டுச் சிந்திக்கலாகாது என்பது பொருள்). வஸ்திரத்தையும் குளிரைத் தடுத்தற் பொருட்டுச் சிந்திக்கவேண்டும். (அலங்காரத்தின் பொருட்டுச் சிந்திக்கலாகாதென்பது பொருள்.) ஓடும் பொன்னும் சாகமும் சாலியன்னமும் சமானமாய் (கொள்ளத்தக்கது தள்ளத்தக்கதென்னும்

வேற்றுமையில்லாத தன்மையாய்)ச் சிந்திக்கவேண்டும். * சென்ற வஸ்துக்களில் சோகப்படாதிருத்தலிலே புநர்ஜன்மமிராது. (௧௫-௧௬)

आत्मयोगमवोचद्यो भक्तियोगशिरोमणिं ।
तंवन्दे परमानंदं नंदनंदनमीश्वरम् ॥

பக்தியோக சிரோமணியான ஆத்ம யோகத்தினை; கூறுவர் எவரோ, அந்த நந்த குமாரரான ஈசுவரனை வணங்குகின்றேன்.

---

* உபலக்ஷணத்தால் இனிவரத்தக்க வஸ்துக்களில் ஆசையில்லா திருத்தலாலும், நிகழ் காலத்துக் கிடைத்தவஸ்துகளில் ஹர்ஷசோக மில்லாதிருத்தலாலும் புனர் ஜன்மிராதென்பது கொள்ளப்படுகின்றது.

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

**உத்திரகீதை முற்றிற்று.**